— Page - 469 —

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 16	குரோதி ஞூ தை மீ	வருட சந்தா
இதழ் : 10	ஜனவரி—பிப்ரவரி மீ 1965	ரூ. 3-00.

— Page - 469 —

திருவலம்

ஸ்ரீ சிவானந்த மவுன சுவாமிகள்

[பக்கம் 437]

ACC. No. 9886.

பொருள் அடக்கம் பக்கம்

1. மமகார நாசம், நமஸ்கார சம்பத்
(திருப்புகழ்மணி) ... 433
2. 'வேதவித்தகா' பொது திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) 438
3. அருணகிரிநாத சுவாமிகள்
(தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 447
4. சண்முக கவச விளக்கம் (திருப்புகழ் சதுரர்
சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ... 452
5. உருத்திர நரசிம்மர் (அன்பன) ... 456
6. சிவபோகசாரம்—''அறியும்பகுதி''
திருமதி தர்மா ராஜாராமன் ... 462
7. சித்தர்கள் ''கும்மியடிக்கலாம்'' (ரஸபதி) ... 465
8. தீராத விளையாட்டுப்பிள்ளை (ஆ. கி. ரங்கராஜன்) 472
9. 31st December 1964
(*Thiruppugal Mani*) ... 477

Grams: MURSOKS. Phone: 51388

முருக! நான் உனை விட்டிராமே, உலோகித
பத்ம சீர்பாதம் நீ இனிவந்து தாராய்!

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர்: D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இண்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே,

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ஹூ தை மீ ஜனவரி — பிப்ரவரி 1965	இதழ் 10

மமகார நாசம், நமஸ்கார சம்பத்—(தொடர்ச்சி)

(திருப்புகழ்மணி)

முருகன் மயில்மேலேறி விளையாடுகிறானும். மயில் என்பது ஓம்காரம். அதற்குள்ளிருந்து விளையாடும் பொருள் முருகன்.

“ஓங்காரத்துள்ளொளிக்குள் முருகனுருவம் கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என் செய்வார்
யமதூதருக்கே ”

என்றார் அருணகிரியார்.

மயில் என்பது சின்முத்திரையைப் போலிருக்கிறது. பெருவிரலுடன் ஆள்காட்டி விரலைச்சேர்த்து மற்ற மூன்று விரல்களையும் தனியாக நிறுத்தி வைத்திருப்பதே சின்முத்திரை. தக்ஷிணாமூர்த்தி சின்

முத்திரையைக் காட்டித்தான் சனகாதியருக்கு உப தேசித்தார்.

அந்த முத்திரையின் ரூபமாயிருக்கும் மயிலாகிய ஓம்காரம் பதினுலுலகங்களுக்கும் அரசனுகிய முருகனை அறிவிக்கும் முத்திரை அல்லது அடையாளம். ஆத லால், ஓம்காரத்தை மந்திரங்களின் முன்னால் நிறுத்தி வைத்திருக்கின்றனர்.

எல்லா தெய்வங்களும் உலகெலாம் நிறைந்த பிரம்மத்தின் சொரூபங்களே. அந்தத் தெய்வ சுவ ரூபங்களெல்லாம் இருக்குமிடம் ஓம்காரமே. அதுவே எல்லா தெய்வ சுவரூபங்களையும் குறிக்கும் முத்தி ரையுமாகும்.

"பணியுமடியார் சிந்தை மெய்ப்பொருளதாக நவில்
சரவண பவாவொன்று வற்கரமு மாகிவளர்
பழநி மலைமேல் நின்ற சுப்ரம்மண்யா!

என்றழைக்கிருர் அருணகிரியார்.

உலகம்நிறைந்த பொருள் எங்கும் நிறைந்திருக் கும் காலத்தில், எல்லா உருவங்களும் அதன் உருவங்க ளாகையால், அந்த பிரம்மம் பக்தர்களின் மூலமாக வும், கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கும் சிலா விக்கிரங்களின் மூலமாகவும், மற்ற நாம ரூபங்களாக வும் அருள் செய்கிறது.

எங்கும் நிறைந்த பிரம்மத்தை உங்களால் பார்க்க முடியாது; பணியுமடியார் சிந்தையில் பார்க்கலாம். அப்படிப் பார்க்க முடியாவிட்டால் கோயிலில் பிர

சந்திரனைச் சூடி, உயிர்ச சால்பளிதத சஙகரனை,
-சிந்தை கனிந்துருகிச், சீர்பெறுவ(து) என்றேயோ!

திஷ்டை செய்துள்ள விக்ரகங்களின் மூலமாகவும் பார்க்கலாம் என்று இந்தப் பாட்டின்மூலம் உணர்த்து கிறார் அருணகிரியார். பிரதிஷ்டை யென்பது அதிஷ்டான ஸ்தலம்.

ஆகாசத்தை ஒருவராலும் பார்க்க முடியாது. நாம் பிறப்பதற்குமுன் ஆகாசத்தைத்தான் ஆதார மாகக் கொண்டிருந்தோம். பிரம்மம் ஆகாசத்தையே தனக்கு அஸ்திவாரமாகப் போட்டுக்கொண்டு மூச் சைப் படைத்தது. மூச்சின் மூலம் ஜீவராசிகளின் இதயத்தைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டது. பிரமத்தினுடைய மூச்சே சகதி. அந்த மூச்சுதான் வேதமும்.

பகவானைப்பற்றிப் பக்தர்கள் பாடியுள்ள பாட் டெல்லாம் பகவானுடைய மூச்சேயன்றி வெறும் பேச்சல்ல. ஆதலால், காற்றைப் படைத்த பிரம்மம் அக்காற்றிலிருந்து அக்கினியைப் படைத்தது.

அக்னி யில்லாவிட்டால் உயிர் வாழ முடியாது. அக்னியிலிருந்து வருவதுதான் பேச்சு. ஆண்டவனைப் பற்றிப் பேசும் பேச்சுக்களெல்லாம் காயத்ரி மகா மந்திரமாய் விடுகிறது. பகவான் எல்லா ஜீவராசி களின் உடலிலும் வாழும் தீயாக இருப்பதால் "எரியலால் உருவமில்லை" என்றார், அப்பர்.

அக்னிதான் உருவத்தை யுண்டாக்குகிறது. கல்யாண காலத்தில் ஹோமத்தீயை வளர்த்து எனக் குக குழந்தை பிறக்கவேண்டுமென்று பிரார்த்திக்

சொல்தொடருக(கு) எட்டாத ஜோதி சொருபத்தை,
முற்றும் உணர்ந்து முதன்மையுறல் என்றேயோ.

கிறான் மணமக்கள். தசரதர் செய்த புத்திர காமேஷ்டி யாகத்தின் மூலமாகத்தான் இராமன் பிறந்தான்.

தாய்க்கும் தகப்பனுக்கும் அக்னி யிருந்தால்தான் குழந்தையை உண்டு பண்ண முடியும். ஆனால், அந்த அக்னி வாழும்தீயாக இருக்கவேண்டுமே யன்றிப் பாழும் தீயாக இருக்கலாகாது. அன்பே வாழும்தீ, சினமே பாழும்தீ. கருப்பமாயிருக்கும் பெண்கள் ஆண்டவனிடத்தில் அன்பை வளர்த்தால், தெய்வீக லக்ஷணங்கள் பொருந்திய குழந்தைகள் பிறக்கும். இதுபோல் நல்லமுறையில் கண்ணனும் கந்தனும் போன்ற தெய்வீகக் குழந்தைகளைப் பெற்றுத் தெய்வீக பரம்பரையை வளர்ப்பதற்காகத்தான் இல்லறத்தை ஏற்படுத்தி யிருக்கிறான் இறைவன்.

அழியும் சரீரத்தில் அழியாப் பொருளாகிய முருகனிருக்கிறான். அழியாப் பொருளைத் தெரிந்து கொண்டால் மரணம் கிடையாது. அதுதான் மெய்ப் பொருள். "கூகா வெனவென் கிளை கூடியழப் போகாவகை மெய்ப்பொருள் பேசியவா" என்றார் அருணகிரியார்.

இந்த உடல் நீயல்ல; உடலிலிருக்கும் தெய்வமே நீ, என்ற மெய்ப்பொருளை யுணர்த்தி விடுகிறான் முருகன். மெய்ப்பொருளை அக்ஷரம், என்று சொல்வர் வடமொழியாளர். அக்ஷரம், என்றால் அழிவில்லாதது என்று பொருள். அக்ஷரம் என்ற சொல்லே தமிழில் "அக்கரம்" என்று மாறியது. "சரவண பவாவென்ற

அன்னை உமையாள் அருளெண்ணி, எஞ்ஞான்றும்
இன்ப நிறைவாய் இருக்குநாள் என்றேயோ

அக்கரமுமாகி வளர்" என்று இதைத்தான் குறிப்பிடுகிறார் அருணகிரியார்.

ஆண்டவனுடைய நாமங்களாகிய அக்ஷரங்கள் அழியாப் பொருளாகி உலகத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந் நாமங்களைச் சொல்பவரனைவரும் அழியாப் பதத்தை யடைவர். ஆண்டவனுடைய நாமங்களே அழியாப் பதங்கள். நாமங்களைச் சொல்லுவோம். அழியாப் பதத்தை யடைவோம்.

உ

ஸ்ரீ சிவானந்த மவுன சுவாமிகள்

வட ஆற்காடு மாவட்டம் திருவலம் தலத்தில் சில ஆண்டுகளாகத் தங்கி சிறந்த திருப்பணித் தொண்டு ஆற்றி வருகிறார்கள். சென்னை கந்தகோட்டம் கநத சுவாமிகககு வெள்ளி ரதம் முடித்து வைக்கும் திருப்பணியிலும் இப்பொழுது ஈடுபட்டுள்ளார்கள். 31-12-1964 வியாழககிழமை செனனை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தாரின் திருப்புகழ் தலயாத்திரையுடன் விஜயம் செய்து தரிசனம் கொடுத்தது மக்கள் பாக்கியம். திருவலம் கோயில் தர்மகர்த்தர் V. D. கோவிந்தராஜ செட்டியாரவர்கள் சுவாமிகளுடன இருந்து உதவிபுரிந்து வருகிறார்கள். திருவலம் கோயில மூன்றும் ஆண்டு மகா கும்பாபிஷேகம் 14-1-65 வியாழக்கிழமை நடைபெற யிருக்கிறது.

வருக ! வருக !! வருக !!!

31-12-1964 திருத்தணிப் படிவிழா வெகு சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீ திருபபுகழ்மணி அவர்கள் கலந்துகொள்ள தணிகேசன் அருள்புரிநதான.

என்னை மறந்தே, இறையிறைவி தாளெண்ண.
பொன்னும் துரியத்தில், பூரிப்ப(து) என்றேயோ.

பொது

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

வேத வித்தகா சாமி நமோநம
வேல்மி குத்தமா சூரா நமோநம
வீம சக்ரயூ காளா நமோநம — விந்துநாத
வீர பத்மசீர் பாதா நமோநம
நீல மிக்ககூ தாளா நமோநம
மேக மொத்தமா யூரா நமோநம — விண்டிடாத
போத மொத்தபேர் போதா நமோநம
பூத மற்றுமே யானாய் நமோநம
பூர ணத்துளே வாழ்வாய் நமோநம — துங்கமேவும்
பூத ரத்தெலாம் வாழ்வாய் நமோநம
ஆறி ரட்டிநீள் தோளா நமோநம
பூஷ ணத்துமா மார்பா நமோநம — புண்டரீக
மீதி ருக்குநா மாதோடு சேயிதழ்
மீதி ருக்குமே ரார்மார்பு லோமசை
வீர மிக்கஏழ் பேர்மாதர் நீடினம் — நின்றுநாளும்
வேத வித்தகீ வீமா விராகிணி
வீறு மிக்கமா வீணு கரேமக
மேரு வுற்றுவாழ் சீரே சிவாதரே — யங்கராகீ
ஆதி சத்திசா மாதேவி பார்வதி
நீலி துத்தியார் நீணுக பூஷணி
ஆயி நித்தியே கோடீர மாதவி — யென்றுதாழும்
ஆர்யை பெற்றசீ ராளா நமோநம
சூரை யட்டுநீள் பேரா நமோநம
ஆர ணத்தினுர் வாழ்வே நமோநம — தம்பிரானே!

கருணை நினைந்தொழுகக், கல்மனமும் நையுக";
மருள்ஒழியும் ; இந்த மதிபிறப்ப(து) என்றேயோ.

(பதவுரை.) வேத வித்தக......பூஷணத்து மாமார்பா!)

வேத வித்தக சாமி நம ஓம் நம - வேத ஞான முதன்மை இயல்பான மூர்த்தியே! நமஸ்காரம், காத்தருள், நமஸ்காரம்;

[*வித்தகம் - ஞானம்; வேத அகவித் என இயைத்து, நான் மறை இதய விதையான எனினுமமையும். சாமி - இயற்கையின் முதன்மையன்.*

வேல் மிகுத்த மா சூரா நம ஓம் நம—வேலின் ஆற்றல் வெளிப்பட, சுர் என்று விரையும் பெருமானே! வணக்கம், காத்தருள் வணக்கம்;

வீம சக்ர யூக அளா நம ஓம் நம - அச்சம் விளைவிக்கும், சக்கர வியூக அணிவகுப்பை ஆள்பவனே! அடைககலம், கா கா அடைக்கலமே;

[*வீமம் - பயங்கரம். சக்கர வ்யூகம் என்பது, ஓசை நயம் கருதி, சக்ரயூகம் என நின்றது.*

விந்து நாத வீர பத்ம சீர் பாதா நம ஓம் நம - ஒளியும் ஒலியுமான வீரமொடு விரையும் பத்ம ரேகை சிறந்த பாதங்களை யுடையவனே! போற்றுகிறேன் ஐயா! காத்தருள், போற்றி;

நீலம் மிக்க கூதாள நம ஓம் நம - நீல நிறம் மிக்க (குளிர்ந்த) கூதாளம் பூ மாலையனே! ஏற்றுக்கொள், நமஸ்காரம், நமஸ்காரம்;

மேகம் ஒத்த மாயூரா நம ஓம் நம - கருமேகம் போன்ற நீல மயில் வாகனா! நமஸ்காரம். பிரபோ, காப்பாற்றும் நமஸ்காரம்;

விண்டிடாத போதம் ஒத்த பேர் போதா நம ஓம் நம - சொல்லுருவில் சொல்லிக் காட்ட முடியாத தெளிவு அமைந்த பெருமக்கட்கு, (மேலும்) தெளிவு வழங்கும் தெய்வமே! வணக்கம், காத்தருளும்; அடியேம் உமது) அடைக்கலம்;

மெய்மை வழியொழுகி, மெய்ப்பொருளை எண்ணியுறின்,
உய்யுமுயிர் உண்மை; உணர்வதுதான் என்றேயோ.

[விள்ளுதல் - விளம்புதல்; விண்டிடாமை - சொல்ல முடியாமை; இடு - தன்னவினை. போதம் - (புத்தி தத்துவத்) தெளிவு. சிவஞான அனுக்கலை, போதம் ஒத்த பேர் என்றார். அடுத்து வந்த போதா என்பது, சிவஞான போதாகாசாரியனே எனும் பொருளில் நின்றது.]

பூதம் மற்றுமே ஆனாய் நம ஓம் நம - ஐம்பூதங்கள், மற்றுமுள்ள பொறிகள், குணங்கள், கரணங்களில் ஊடுருவி இருப்பவனே! அடைக்கலம் ஐயா! நமஸ்காரம்; அடியேம் உமது அடைக்மலமே;

பூரணத்துளே வாழ்வாய் நம ஓம் நம - (எங்கே) நிறைவு ளதோ அங்கே வாழும் நியதியனே! நமஸ்காரம்; காத்தருள் பெருமா! நமஸ்காரம்;

துஙகம் மேவும் பூதரத்து எலாம் வாழ்வாய் நம ஓம் நம - (மாபெரும்) தூய்மை பொருந்திய மலைநிலம் முழுதும் வாழ்பவனே! வணக்கம் அரசே! கா கா எம்மை, வணக்கம் ஐயா!

[பூ - பூமி, தரம் - தரிப்பது; தாங்குவது எனும் பொருளில் மலையை நினைப்பித்தது.]

ஆறு இரட்டி நீள் தோளா நம ஓம் நம - நீண்டுள பன்னிரு தோளுடைய பரமா! நமஸ்காரம், கா கா! நமஸ்காரம் ஐயா!

[நீள் தோள் - ஆஜாநுபாஹு.]

பூஷணத்து மா மார்பா நம ஓம் நம - தெய்வ அணிகள் பல அணிந்த திருமார்பினனே! வணக்கம் பெருமா! ஓம் வணக்கம்;

(புண்டரீக.........சீராளா!)

புண்டரீக மீது இருக்கும் நா மாதோடு - (வெண்) தாமரை மேல் வீற்றிருக்கும் நாமகள் எனும் சரஸ்வதியுடன்;

சே இதழ் மீது இருக்கும் ஏர் ஆர் மா - செந்தாமரைமேல் எழுந்தருளி யிருக்கும் எழில் நிறைந்த திருமகளும்;

இம்மையில் நல்லன்யான், என்றுள்ளம் வாழுமெனில்.
செம்மை பிறக்கும்; சிவமாகி வாழ்வோமே.

[சே - செக்கிறம். ஏர் - எடுப்பான தோற்றமுமாம். ஆர் - நிறைவு.]

புலோமசை - இந்திரன் மனைவியான இந்திராணியும்;

வீரம் மிக்க ஏழ் மாதர் - வீரம் மிகுந்துள தெய்வ மாதர்கள் எழுவரும்;

நீடு இனம் நின்று நாளும் - சிறந்த (அவர்கள்) இனமான பிற சக்திகளுடன், நாள் தோறும் சூழ்ந்து இருந்து;

வேத வித்தகீ - (வேத வித்தக சாமியான முருகனை அருளிய) வேத ஞான விமலையே!

வீமா விராகினி - இயல்பாகவே அச்சம் தரும் பாசம் அற்றவளே?

[வீமம் - பயங்கரம். விராகினி - விரக்தியள். மற்று, வீமா - பயங்கர துர்க்கையே! விராகினி - உக்ர தவக்கோலம் உடையவளே எனினுமாம்.]

வீறு மிக்க மா வீணை கரே - வேறு எதற்கும் இணை இல்லாத சிறந்த வீணை ஏந்திய திருக்கரத்தை யுடையவளே!

[வீறு - பெருஞ்சிறப்பு. வீணை - வீணை. கரே - கரத்தினள்.]

மக மேரு உற்று வாழ் சீரே சிவாதரே - மாபெரும் மேரு மலையில் பொருந்தி வாழும் சிறப்புடைய சிவனார் திருமேனியில் சேர்ந்து இருப்பவளே!;

[சிவாதரே - சிவத்தை வலதரில் சிறக்கக் கொண்டவள்.]

ஆதி சத்தி - (எவர்க்கும் எதற்கும்) முதன்மையான இறைவியே!;

சாமாதேவி - சாம வேத கான தேவியே!

பார்வதி - பருவத மன்னன் பாலகியே!;

நீலி - நீல நிறமாகி நிறைந்தவளே!

மெய்யன்பு வாழ்க்கையினில், மேவிஉற வாகுமெனில்,
உய்ய அருள்தான் உதவி புரியுமரோ.

துத்தி ஆர் நீள் நாக பூஷணி - புள்ளிகள் நிறைந்த மேனியுடைய புனித பாம்புகளை அணிகலனாகப் பூண்டவளே!; [துத்தி - புள்ளி.]

ஆயி - (அகில உலகிற்கும்) அன்னையே!

நித்தியே - (என்றும்) நிலையா யிருப்பவளே!

கோடீர மாதவி என்று தாமும் ஆர்யை பெற்ற சீர் ஆளா நமோநமः - குருக்கத்தி போன்ற சடையுடைய பெருந் தவக் கோலம் பூண்டவளே என்று (பன்னிரு நாமம் கூறித்) தலை வணங்கும் மாதேவி பெற்ற மாபெரும் மதிப்பை ஆள்பவனே! நமஸ்காரம், ஓ சொரூபா நமஸ்காரம்;

[கோடீரம் - சடை. மாதவி - குருக்கத்தி. ஆர்யை - ஜகதம்பா.]

சூரை அட்டு நீள் பேரா நம ஓம் நம - சூரசம்ஹாரம் செய்து, (என்றும்) வளரும் பேராளா! நமஸ்காரம் பெருமா! ஏற்றருள் என்றே நமஸ்கரிக்கின்றேன்;

ஆரணத்தினர் வாழ்வே நம ஓம் நம - வைதிக வேதியர் கட்கு வாழ்வளிப்பவனே! வணக்கம், ஓம் உருவே வணக்கம், (எ - று.)

விரிவுரை

வித் எனும் தாதுவில் இருந்து, வேதம் எனும் பெயர் பிறந்தது; வித் - ஞானம். அந்த வேத இருதயத்தில், விமல சொரூபம் விளங்குகின்றது.

ஓத உரியவர், அவ்வேதங்களை இடையறாது ஓதுகின்றனர். ஓதும்போது நாதம் உதிக்கும்; அந்த நாதம், செவியிற் புகுந்து சிந்தையில் நிறையும். அதன் வழி, சிந்தையில் விளங்கும் சிவம். ஊன்றி அதை உணர்ந்தே, உம்மை வேத வித்தகா என்று விளிக்கின்றேம்.

சிகரம்போல் தீவினைகள், சேர்ந்து இருக்குமெனில்,
நகரில் மலதுன்பம், நண்ணுவதும் கண்டோமே.

அவரவர் தரத்திற்குத் தக்கபடி, இயற்கையி லிருந்து எண்ணிறந்த திருமேனி கொண்டு எழுபவர் நீர். உம்மிடம் எங்களை ஒப்படைப்பது தான் உத்தமம். அதனால் தான், ஸ்வாமீ! நமோநம என்று புகலடைகின்றேம்.

கற்ற அறிவு, கேள்வியில் பெற்ற அறிவு, ஆன்மாவிற்கே உரிய அறிவு ஆகிய இம் மூன்றும் ஒருமை உணர்வை உருவாக்குமேல், அதன் பின் உதிக்கும் சிவஞானம். அந்த அருள் ஞானம், வேல் உருவாகி உமது திருக்கரத்தில் விளங்குகிறது. அவ் வேல் புடையால், அக இருளை அழிப்பை; புற இருளைப் பொசுக்குவை, இந்த இரு இருளிலும் இருந்து, அறியாமையால் இறுமாந்தவர் அளவிலர். அவர்களைச் சிறிது சிறிதாகத் திருத்தி அணைத்து ஆளும் உம்மை, வேல் மிகுத்த மா சூரா நமோநம என்று, ஏத்தி மகிழ்ந்து இறுமாப்பம்.

அன்பர்களை அடர்க்க, அசுர கலகர் இடையிடை எழுவர்; உடனே வளமார் சக்ர வியூகம் வகுப்பை. இலட்சம் வீரர், நவ வீரர், பூதர்கள், பூத மன்னர்கள் முதலினோர், அந்த வியூகத்திலிருந்து ஆரவாரிப்பர். அதன் வழி புறப்பகை யாவும் பொன்றிவிடும்.

ஆத்மார்த்த தியான சிரேஷ்டர்களை, காமக் குரோதாதி அகப்பகை எழுந்து அழுத்துமேல், உமது ஷட்கோண சக்கரம் உருத்து எதிர்க்கும். இதன வழியில் உய்யும் எந்த உயிர்களும், இந்த அருமை அறிந்தே, வீம சக்ரயூகாரா! நமோநம என்று வீரிட்டுக் கூவி உம் திருவடியில் வீழ்வம்.

எண்ணினர் முன், ஒளிவட்டம் எழும்; இது, விந்து தத்துவம் எனப்பெறும்: நாதம், அதன் கருவில் நடமிடும். இது, சொருப நிலை; குறித்த விந்து, மயில் உருவம் கொள்ளும்; நாத தத்துவம், கோழிக் கொடியாகிக் கொக்கரிக்கும். அகப்

கணவன இறைவன், கருதுமுயிர் தேவி;
இணங்குகின்ற இவ்வளவு ஏய்துவதும் என்றேயோ.

பகையும், புறப்பகையும், இவைகளால் குன்றி அடங்கும். அகத்தும் புறத்தும் இப்படிச் செயலாற்றும் உம்மை, **விந்து நாத வீர !** என்று விளிப்பம்.

பத்மரேகை உமது திருவடிகளில் பளபளக்கும் ; அவைகளைச் சேவித்தவர் சிவகதி பெறுவது திண்ணம் ஆதலின், **சீர் பத்ம பாதா நமோநம** என்று, போற்றி மகிழ்ந்து புளகிப்பம்.

குளிர்ச்சி மிக்கது கூதாள மலர். கண்ணும் மனமும் களிக்கும் அந்த நீலமலர் மாலையணிந்த உம்மை, **நீலம் மிக்க கூதாளா நமோநம** என்று, ஓதுநர் பிறவித் தாபம் ஒழிந்துவிடும்.

விண்ணில் நீல மேகங்கள் விளங்குதல்போல, உயர்ஞான விண்ணில் ஓங்கார மயிலேறி உலா வருவை. அதை உணர்வம். உடனே **மேகம் ஒத்த மயூரா! நமோ நம** என்று உருகிய உளத்தொடு சரணம் அடைவம்.

ஒளிமயம் ஆவது உணர்வு. போதம் என்னும் பெயரிட்டு, அதை ஓரளவு புரிந்து கொள்வம். உணர முடிவதன்றி, இப்படி உளது அது என்று எம்மால் எப்படிச் சொல்லமுடியும்? நீர்வீழ்ச்சியால் உடல் குளிரும்; சக்தி நிபாதம் எனும் அருள் வீழ்ச்சியால் ஆன்ம இதயம் குளிர்ச்சி பெறும். இங்கிலை எங்தினர் பலருளர். உமது போதனை அவர்கட்கே உரியது. கற்றவரும் மற்றவரும் கடை விரிப்பர். பனஞ்சோலைபோல் கலகலப்பர். பிரபோ! விண்டிடாத போதம் எய்திய வித்தகர்கள், புனித மோன அந்தப்புரத்தில் புகுந்திருப்பர் ; தனித்து விழித்த அவர்களைச் சந்திதது, அதிரகஸ்ய அனுபவங்களை தெளியப போதிக்கும் தெய்வம்நீர். அதனால், **விண்டிடாத போதம் ஒத்தபேர் போதா நமோ நம** என்று, அகமுமாகி உம்மிடம் அடைக்கலம் புகுவம் அடியேம்.

மண்ணில் திண்மை, நீரில் சுவை, தீயில் வெம்மை, காற்றில் ஊக்கம், விண்ணில் கலப்பாகி விளஙகுகிறீர். மெய்

கண்ணீர்நம் பாவம் கழுவக், கடவுளடி
எண்ணி, இதயத்தில் இன்புறுதல் என்றேயோ.

வாய் கண் மூக்கு செவி எனும் அறிகருவிகளிலும், வாக்கு பாதம் பாணி, எருவாய் கருவாய் எனும் தொழிற் கருவிகளிலும், எம் வினையீட்டிற்குத் தக்கவாறு இருந்து விளையாடுகிறீர். இவைகளை எண்ணும் போதெல்லாம், பூதம் மற்றுமே ஆனாய் நமோநம என்று, புந்தி யுருகிப போற்றுகின்றோம்.

ஓயாது குறைவையே உணர்வார் இடத்தில் ஒதுங்கியுளை நிறைவையே நினைவார் நெஞ்சகத்தில், நிறைவாழ்வாகி நிலைக்கின்றீர். அதை அறிந்தே, பூரணத்துவே வாழ்வாய் நமோநம என்று, அடியேம் போற்றுகின்றேம்.

களங்கம் அற்ற ஞானிகள், மலைகளில் ஏறி, குகைகளுள் புகுந்து மகிழ்கின்றனர். வானளாவிய அம்மலைகளில், முதன்மை மூலிகைகள் பல முளைக்கின்றன. மோசமான மொழிகளும், நாசகரமான நினைவின் அலைகளும், அங்கு நிழலிடுவது இல்லை. நிலைபெற இருப்பது நிலம். தாம் பெற அந்நிலத்தை வேர்களால் தாஙகுதல் பற்றி, மலைகட்குப் பூதரம் என்றொரு பெயருளது. தியாக சீலத்தை நினைவுறுத்தும் அத்தகைய மலைகளில் தான், வாழ்விக்கும் உமது பேறு வளர்ந்துளது. உணர்கின்றேம். துங்கம் மேவும் பூதரத்து எலாம் வாழ்வாய் நமோநம என்று வாழ்த்துகிறது எம்வாய்.

பயனுள தமிழ் உயிரெழுத்துப் பன்னிரண்டு. பன்னிரு நிலையை, துவாதசம் என்பர். பன்னிரு சூரியர்போல், சாதகர்க்கு, ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு திருக்கரம் உதயம் ஆகும். துவாதசாந்த நிலை எய்தும் போது, வித்தகப பன்னிரு திருக்கரங்களும் வெளிப்படும். ஆரம்ப சாதனையிலும், இடையிடை வினையருள் வந்து இடர்விளைக்கும் காலமெல்லாம், கனிவுறும் அன்பர்கள் கண் கலங்காதபடி அக்கரங்கள் காப்பளிக்கும் கருணையை நினைந்து, ஆறிரட்டி நீள் தோளா நமோநம என்று அலறி விம்மி, உம்மிடம் அடைக்கலம் ஆவம்.

மண்ணிற் பிறந்தபயன, மாதவததர் தாள்பணிந்து,
எண்ணிச் சிவத்தில் இருக்கும் ரகசியமே.

உமது அணிகலன் ஒவ்வொன்றும், உயர்ந்த ஒவ்வொரு மந்திர தத்துவம். புறநோக்கிற்குப் பொலிவு நிலே. அக நோக்கிற்கு அவைகள் அறிவிக்கும் அறிவிப்பேதான் வாழ்வின் அறிவிப்பு. அவைகளை நினைந்து, பூஷணத்துமா மார்பா நமோநம என்று எண்ணி ஏத்தி இறைஞ்சுவம் எளியேம்,

மருகி கலேமகள். மாமிதிருமகள். இருவரும் வருவர். கனதன வாழ்வில், கற்பின் பொற்பில், ககன ராணி எனப் பெறும் இந்திராணியும் வருகிருள். அபிராமி, மகேஸ்வரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி முதலிய வீர மகளிர் எழுவருடன், ஏராளமான சக்திகள் வரிசைக் கிரமத்தில் வருகின்றனர். பரமேஸ்வரியை வலம் வருகின்றனர். பணிகின்றனர்.

வேத வித்தகீ! வீமா விராகிணீ! வீஞக்ரே! சீரே வாதரே! ஆதி சித்தீ! சாமாதேவி! பார்வதீ, நீலி, நாகபூஷணீ! ஆயீ! நித்தியே! கோமர மாதவி என்று போற்றி வணங்கிப் புளகிக்கின்றனர்.

அத்தேவி அருளிய சிறப்பு அனைத்தையும் ஆள்பவர் நீர்; அதனை யறிந்து, அந்த ஆர்யை பெற்ற சீரான நமோநம என்று போற்றி அடியேம் புளகிபபம்,

ஆயிரதெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகம் வரை ஆண்டவர்கள், சூரபதுமனைத் தவிர வேறு எவருமே இல்லை. அதுமட்டும் அல்ல; ஓர் உடலில் இரண்டு உயிர் என இருந்த அதிசய புருஷன அவன். அவனுடைய ஓர் உயிரை மயிலாக்கி, ஓர் உயிரைச் சேவலாக்கி ஆண்ட அற்புதத்தர் நீர். சூரசம்ஹாரம் என்று பெயரிட்டு, அப்பெயர் கொண்டே அகில உலகமும் உம்மை ஆராதிக்கின்றது.

தரை யட்டு நீள் பேரா என்று உம்புகழைச் சொல்லிப் புல்லும் எம் உள்ளம்.

விதியினை நொந்து வெறுத்துப் பயனில்லை;
பதியின் அருளெண்ணிப் பண்புறுதல நல்லதரோ.

வேதம் ஓதும் வேதியர் உளர். அவர்கள், என்றும் சாந்தபத வியோமம் ஆனவர்கள். அகிலத்திற்கு அரணம் தரும் அவர்கள், ஆரணர் எனப் பெறுகின்றார். வளம் பெற, அவர்கள் வாழ்வில் என்றும் இருந்து அருள்பவர் நீர். இவை கனை நினைக்கின்றோம். நெஞ்சம் நெகிழ்கிறதே!

ஆரணத்தினர் வாழ்வே நமோநம என்று உம்மை ஆராதிப் போம்; அமைதி பெறுவோம். தமக்குமேல் ஒரு தலைவன் இலாதவன் தம்பிரான். தனிப்பெரும் சிறப்புடைய உம்மை, தம்பிரான் என்பது தான் தகுவது. மற்று ஆன்ம நாதன் என்றும் பொருள் தரும் நாமம் அது. வா ஐயா! எம் ஆன்ம அகத்தில் வந்து இரு ஐயா! ஐயா! என்று வீழ்ந்து வணங்கி விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்!

ஓம்.

அருணகிரிநாத சுவாமிகள்

[நாகபட்டினம் முதல் வேதாரண்யம் வரை]

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.)

சிக்கலினின்றும் புறப்பட்டு நாகபட்டினத்தை (47) அடைந்து.

"நாலும் ஆறும் வெற்றிகொண்ட நாகை ஞான பண்டி
தன், ஆலயம் புகுந்து வீழ்ந்தெழுந்து நின்றக்காரமும்,
பாலும் தேனும் என்ன மூன்று பாசுரங்கள் பாடி
எக்காலும் பாலனுய்க் குலாவும் கந்தனைப் பராவியே."

[சே. பு. 983].

மூன்று திருப்புகழ்ப் பாடல்கள் (832—834) பாடினார். நாகபட்டினம் கடற்கரையூர் ஆதலின் கடலின் ஒலி 'ஓலம்

பலதலங்கள் சென்றும் படியா மனத்தர்
சிலநேர மோனத்தால் சிந்தை சிவம் ஆகுனரே

முருகா' என ஒலியிடுவது போலத் தமது காதில் முழங்க அவ்வொலியையே முதலாகக் கொண்ட "ஓலமிட்டிரைத் தெழுந்தவேலே" என வரும் பதிகத்தைப் (832) பாடிப் பெண்கள் மயக்கு எனனைத் தாக்கினும் உன் கழலை மறவேன் (833) எனத் திடம்பட உரைத்து, உன் திருவடியே உறவாக மருவும் அழியாவரம் ஒனறையே யான் விரும்புகின்றேன்' எனக்கூறி மணிவாசகப் பெருமான் "வேண்டத்தக்கதறி வோய் நீ" என்றது போலத் தாமும் தமக்கென்று ஓர் இச்சை வேண்டாம் என்னும் கருத்துடன் "முருகா! நீ எதைக் கொடுக்க விரும்புகின்றாயோ அதைக் கொடு ["இறைவா! எதுதா அதுதா!]—எனப்பாடி (834) வணங்கினர்.

"ஓலமிட்டிரைந்து" (832) என்னும் பாடலில் ஆதி சேடனை (நாரணற்கு) "நாகமெத்தை" என சதுர்படக் கூறி யுள்ளது மகிழத்தக்கது.

நாரணற்கு அருள் சுரந்த மருகோனே என்றது, காஞ்சி யில் கசசி மேற்றளியில் தவஞ்செய்து கொண்டிருந்த விஷ்ணு மூர்த்திக்குத் திருஞானசம்பந்தப் பெருமான் சிவசாரூபம் அளித்த வரலாற்றைக் குறிக்கின்றது. இது

"முத்தமிழ் விரகர், பாட்டலங்கலால்
பரஞ்சுடர் திருவுருப் பெற்றான்"

எனவரும் காஞ்சிப் புராணம் திருமேற்றளிப் படலம் (11)வது பாடலால் அறியலாகும். நாரணற்கு அருள் சுரந்தது திருத் தணிகையில. அவர் முருகவேளைப்பூசித்துச் சக்கரம், சாரங்கம் இவைகளைப் பெற்றதையும் குறிககலாம்.

"ஆழி சார்ங்கமும் மற்றவும் சாமி அளித்தனன்"

[தணிகைப் புராணம்-நாரணர் அருள் பெறு படலம் (22)]

"விழுதாதெனவே" (834) என்னும் பாடல் மனப்பாடத்திற் குரியது.

கள்ளம் அகன்று, கனிவாயக் கருதினரேல்,
உள்ளம் சிவமாம்! உடல் கோயில் ஆகும்மே

நாகையினின்றும் தேவூருக்கு (48) [1] வந்து ஆண்டவனைத் தரிசித்து எட்டிக்குடி (49) என்னும் தலத்துக்குப் போந்தனர். இத்தலம் நாகபட்டினத்துக்கு அடுத்த கீழ்வேளூர் ரயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு 7 மைல் தூரத்தில் உள்ள திருக் கோளிலி என்னும் தேவாரம் பெற்ற ஸ்தலத்துக்கு 1½ மைல் தூரத்திலுள்ளது. இங்கு சித்ரா பௌர்ணமியன்று எண்ணிறந்த காவடிகள் வருகின்றன. இத்தலத்தில் அருணகிரியார் இறைவன் சந்நிதியில் வீழ்ந்து இறைஞ்சி "கன்னல் நறும்பால் செந்தேன் முக்கனிகள் பிழிந்து வடித்த ரசம் என்ன மதுரத் திருப்புகழ்ப் பாக்களைப் பாடினர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பெண்ணாகடம் என்னும் தலத்தில் 'சிவபெருமானே—என் ஆவியைக் காக்க உனக்கு இச்சை யுண்டேல், கூற்றுவன் என்னைக் கண்டதும் விலகி நிற்க (நான் உன அடிமைப பொருள் என்பதற்கு அடையாளமாக) உனது "மூவிலைச்சூலம் எனமேற் பொறி", இடபம் பொறித்து என்னை ஏன்று கொள்ளாய்" என விண்ணப்பித்தது போலத் தாமும்—"நாயேன் ஓயா தலையாதே—கற்பொறி வைத்தருள் பாராய் எட்டி குடிப்பதிவேலா!"—என விண்ணப்பித்து (838), 'என்றைக்கு எம்பெருமான தனது வேற்பொறி, மயிற்பொறியிட்டு என்னை ஆண்டருள் வாரோ' எனக் கவலை கொண்டனர். இவ்வேண்டுகோள் திருத்துருத்தி என்னும் தலத்தில் நிறைவேறப்பட்டது]. எட்டிமரத்துக்குக "காஞ்சிரம்" என ஒரு பெயர் இருப்பதால் எட்டிகுடி என்பதைக் காஞ்சிரங்குடி எனப்பெயர் சூட்டி) ஒரு பதிகம் பாடினர் (836).

எட்டிகுடியினின்றும் வலிவலம் (50) வந்து இறைவனைப் பணிந்து "தொகுத்த நாள்" (842) என்னும் பாடலைப் பாடிப்

[1] தேவூர்—இது திருப்புகழ்வைப்புத் தலம் [பாடல 439]

உள்நாடி எங்கள உமாபதியை ஓர்தலுறின்
கண்ணாடி போலிறைவன் காணவரு கின்றானே

பின்னர் [1] கைச்சினம் (51) முதலாய பல தலங்களைத் தரி சித்து மூவர் தேவாரம் பெற்ற தலமாகிய **திருமறைக்காடு (வேதாரண்யம்)** (52) என்னும் தலத்தை அடைந்தார். திருத் தணி, செந்தில், பழநியிற் போலப் பெருமான் வேதாரணி யத்திற் (843-845) சிறப்புற்று விளங்குவதைக் கண்டு "[2] மேவு திருத்தணி செந்தில் நீள பழநிக்குள் உகந்து, வேத வனத்தில் அமர்ந்த பெருமாளே" (844, 845) என முடியும் இரண்டு திருப்புகழ்ப்பாடி ஆனந்த முற்றார்.

இதனுலும் கொங்குவார்குரவு (289) என்னும் பாடலில், "பழநியில அறுமுக செந்தில் காவல! தணிகையில் இணை யிலி" எனக் கூறுவதாலும் இம்மூன்று தலங்களையே அருண கிரியார் பாராட்டுவதாலும் இம்மூன்று தலங்கள் அவர் காலத்திலேயே பிரபலமாய் இருந்தன எனபதும் முருகவேளுக்கு உகந்தவை அவை, என்பதும் பெறப்படும்.

"உளமகிழ்ச்சியோடு திருத்தணி பற்றிய பெருமாளே" (268);

"செந்திலில் இன்புறு தம்பிரானே" (86).

"பழநியில் அன்புற்றிருக்கும் பெருமாளே" (186) என வருவனவும் காண்க.

மனம், வாக்கு, காயம் மூன்றுலும் முருகவேளைப் பணி வதற்கு மனத்தால் திருச்செந்தூரையும் [செந்தூர்க்கருது— கந்தரந்தாதி (33)].

"செந்திலை உணர்ந்துணர்ந்துணர்வுற" (திருப்புகழ் 47) வாக்கால்பழநியையும்

---

[1] முததுரத்தினம் (491) எனனும் திருப்புகழ்ப் பாடலின் கீழ்க் குறிப்பைப் பார்க்க.

[2] மேவுதல—விரும்புதல்.

நாடி நரம்பெல்லாம் அசையுமா, நம்பன்தாள்
பாடிப் பரவசப் பண்பறிந்து கொள்வோமே

"[படிக்கின்றிலை பழநித் திருநாமம் —கந்தரலங்காரம் 75]
காயத்தால் தணிகையையும் [தணிகைக் குமர!
நின் தண்டை அம்தாள் சூடாத சென்னியும், நாடாத
கண்ணும், தொழாத கையும், பாடாத நாவும் எனக்கே
தெரிந்து படைத்தனனே". —கந்தரலங்காரம் 76].

வணங்குதல் நன்றென உபதேசித்துள்ளார். ராவணனைக் கொன்ற வீஹரத்தி நீங்க, ஸ்ரீராமர் அருள்பெற்ற தலமாதலின் ஸ்ரீராமர் சரிதம் இத்தலத்து மூன்று பாடல்களிலும் சொல்லப் பட்டுள்ளது.

"நூலினை யொதத" (845) என்னும் பாடலில் "வாசுகியைப் புனை நம்பர்" என வருவதால் வாசுகி என்னும் பாம்பை சிவபெருமான் அணிந்துள்ளார் என்பது பெறப்படும். வாசுகி ஆதிசேடன இவைதமைச் சிவபிரான் அணிந்துள்ளார் என்று புராணங்கள் கூறும்.

வாயுவான பஞ்சடைத்துத் திருமால் துயிலும் மலரணையே!
ஆயவிடமாம் யாக்கை அமைத்து /
அரனுர் அணியும் அரும்பணியே.

என ஆதிசேடனை இறைவன் அணிந்து உள்ளதாகச் செவ் வந்திப் புராணத்திலும் "ஆன வாசுகி அன்றுற இன்றும் ஞான மேனியா மேனியனுகர தானுறைந்திடு தன்மைய தாமே"—என வாசுகியைப் புனைந்ததாகத் திருவொற்றியூர்ப் புராணத்திலும் வருவன காண்க.

எங்குநினை யெண்ணும் எளியேற்கு, நின்னருளில்
பங்குதா என்று படிக்கஅருள் புண்ணியனே,

சண்முக கவச விளக்கம்.

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

2. ஆதியாங் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந்தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை ஈசன் துரிசிலா விழியைக் காக்க
நாதனுங் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க.

அருஞ்சொல் :

ஆதி - முதன்மை ; தாது - தேன் ; தார் - மார்பிலணியும் மாலை ; நுதல் - புருவம் ; துரிசு - குற்றம், நாசி - மூக்கு ; நயந்து - விரும்பி.

விளக்கம் :

மூல காரணனாகிய கயிலைச் செலவக் குமரன் அழகிய நெற்றியைக் காக்க. தேன் மணக்கும் கடப்ப மாலையன் இரண்டு புருவங்களையும் காக்க. (அருட்) சுடரான தணிகேசன் குற்றமற்ற விழியைக் காக்க. கார்த்திகைக் குமரநாதன் மூக்கினை விரும்பிக் காக்க.

விசேடம் :

கயிலை என்பது மண்ணுலகத்துளதானது (பிராகிருதம்) என்றும், மண்ணியல் கடந்தது (அப்பிராகிருதம்) என்றும் இரண்டு என்ப. மண்ணுலகிலுள்ளது ஊனக் கண்ணிற்கு மட்டும் புலனாவது, மண்ணியல கடந்த கயிலை ஞானக் கண்ணிற்குத் தோன்றுவது. மேலும் அப்பிராகிருதக் கயிலை, மண்ணுலகி லுள்ளதற்கும் முதன்மை பெற்றது எனவே, 'ஆதியாம் கயிலை' என்றார். மூலகாரண சிவன் எழுந்தருளி

தரமுயர்ந்தால், நம்முன் தனியிறைவன தாள்கள்
வரமகிழ்வம் ; வாழ்வோமிவ் வாய்ப்புறுதல் என்றேயோ

யிருப்பது, ஊழி தோறும் ஓங்கும் ஓங்கலாய் ஒவ்வொரு கற்பத்தில் முன்னுற விளங்கி நிற்பது என்பன போன்ற சிறப்புக்களை யுடைமையின் 'ஆதி' என்ற அடை கொடுக்கப்பட்டது.

கயிலைச் செல்வன் :

ஐம்முகச் சிவத்தின் வேறு அல்லாத அறுமுகச் சிவத்துக்கும் கயிலை உரியது. ஆகலின் கயிலைச் செல்வன் முருகன் எனவாம். கயிலை ஆதிச் செல்வ ர எனக் கூட்டி கயிலைக்குரிய மூலகாரண மூர்த்தியாவான் முருகவேள் என்னலும் ஒன்று.

"மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் உற்ற மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ :'

—(கந்தபுராணம்)

"ஆதி முதலாக வந்த—பெருமாளே" —(திருப்புகழ்)

செல்வன் :

புதல்வன். கயிலைச் செல்வன்—சிவகுமரன் என்க. அல்லது செல்வாக்குகள் உள்ள செல்வன் குமார பிரானே.

"உனது தாயுலக சராசரம் எவையும் ஒருங்குடன்
பூத்தவள் ; உந்தை
கனபரிபுரண சுகத்தன் ; நின் தமயன் காரிய முதல்வன்
நின்மாமன்
வனசனுதியர்கள் பணிபதன் ; இவர்கள் வளனெலாம்
நினக்குரித்ததனல்
வினவு செல்வத்துட் செல்வன் நீ. போரி வீறி வாழ்
ஆறுமாமுகனே" —(சிதம்பர சுவாமிகள்)

அணி நெற்றி :

கவசத்தில் முதற் செய்யுள் தலையைப் பற்றி தலையான செய்திகளைச் சாற்றியது. இரண்டாஞ் செய்யுள் வீட்டிற்கு

முன்னே பிறப்பளித்தாய் ; மொய்த்ததுயர் பட்டேன்யான்.
இன்னும் அளிக்கநீ எண்ணாதே எந்தாயோ

முகப்புப்போல உடலுறுப்புக்களில் முன் வந்து அழகு செய்யும் முகத்தைப் பற்றிக் கூறுகிறது. விலங்குகளின முகங்களில் பெரும்பாலானவை குறுகியே இருக்கும். அறிவுள்ள பிராணி யான யானை ஒன்றே விசாலமான (பிரசன்ன) முகமுடையது. அதனால் ''பிரசன்னோமத்த வாரணஃ'' என்ப. அதனால் யானைக்குப் பிரசன்னம் என்ற பெயர் வந்தது. ஆனால் மற்ற பிராணிகட்கு முகம் குறுகியும் நீண்டும் இருக்கும். முகமே அப்படியானால் நெற்றி எப்படி யிருக்குமென்று கூற வேண்டிய தில்லை. ஆனால் மக்களினத்தார்க்கு நெற்றி அகன்று அழகாக இருக்கும். எனவே, 'அணி நெற்றி' ஆயிற்று. முகத் திற்குக் கண்ணைப்போல அழகு செய்வது நெற்றி.

அணி நெற்றி :

திருநீறு முதலிய அணியத்தக்க நெற்றி. ஆதாரங்களில் ஆறாவது சதாசிவத் தானமான ஆக்ஞைத் தலம் உடையது நெற்றி. பிற சிறப்புக்களையும் கொள்க.

தாதவிழ் கடப்பந்தாரான் :

தாது - தேன், தாது அவிழும் மலர் எனவே புதிய மலர் என்க. புதியரிற் புதியனான குகவேளின் திருமேனியை என்றும் தீண்டப்பெறுதலால் அம்மாலையும் புதுமை மாறாது தேன் சிந்திக் கொண்டிருக்கும் என்க.

கடப்பந்தார் :

கந்தபிரானுக்கு உகந்த மாலை கடம்பு.

'' உருள்பூந்தண்தார் புரளுமார்பினன் ''

(திருமுருகாற்றுப்படை)

கடம்பு அணிதலின் கடம்பன் என்ற நாமமும் வழங்கும்.

தமைமறந்தார், தெய்வத் தகுதியுற்றார் ; யாங்கள்
எமை மறந்தே ஆநந்தம் எய்தஅருள் எம்மானே !

இருநுதல் :

நுதல் இரண்டு எனவே புருவங்கள் எனப்பொருள் பயந்து நின்றது.

சோதியாந் தணிகை ஈசன் :

ஆறுமுகத் தெய்வத்தின் ஆறுபடை வீடுகளில் குன்று தோருடலைச் சேர்ந்த தலம் தணிகை. இங்குச் சூரசம்மாரம் முடித்தபின் சுப்பிரமணியப் பரமன் நூறு கோடி சூரியர் ஒரே காலத்தில் தோன்றியது ஒப்பத், தணிகையில் அமர்ந்திருந்தனர்

"பரமனுதல் விழியிலுதித்தது அந்தரம்மே நிமிர்ந்து
பகீரதையில் தவழ்ந்து நிறைபன்னீரும் குடித்துச்
சரவணத் தொட்டிலேறி அறுவர் முலையுண்டு
சங்கரியின் மடியிலிருந்து ஓமெனுஞ் சொல்பேசி
அரனமலையில் நின்று எவையும் படைத்து
அசுரர் தொலைத்து அமரர் புகுந்து உலகைவலம் வந்து
இரவிசதகோடி யெனத் தணிகை அமர்ந்தருளும்
எழில் ஞான சத்திதரன் இணையடி ஏத்தெடுப்பாம்"

எனவரும் தணிகாசல புராணமும் ஈண்டு எண்ணத்தகும்.

நாதன் : தலைவன் - ஆன்மாவிற்கெல்லாம் பதியாகலின். நாதன் - பரநாத தத்வரூபன் ;

கார்த்திகேயன - கார்த்திகை மாதர்கள் பாலுண்டவன். சரவணப் பொய்கையன் ஆறு குழந்தைகள் உருவில் இருந்த சேயவனுக்குக் கார்த்திகைப பெண்கள் அறுவர் பாலூட்டினர். அதனால் அப்பெருமானுக்குக் கார்த்திகேயன் என்ற திருநாமம் ஏற்பட்டது.

"மழலைகள் விளம்பி மொய்த்த
அறுவர் முலையுண்டு முற்றும்
வடிவுடன் வளர்ந்திருக்கும்—வாழ்வினன்" (திருவகுப்பு)

தேகபுத்தி ஆம்பொழுது, தேவகுரு தாளேத்தில்,
சோகமறும் ; வாழும் சுகம் பிறக்கும் நிச்சயமே

சமரசம் 28

உருத்திர நரசிம்மர்

(அன்பன்.)

உலகம் இயற்கை. என் நிலம், என் செல்வம், என் மனைவி என்று எவரும் உரிமை கொண்டாட முடியாது. எவரையும் வலியலாம். எதையும் எடுக்கலாம். அகம் திருப்தி யடைய அனுபவிக்கலாம். இதை அறிந்திலர் மக்கள். அறிவிக்கிறேன நான் என்று, எழும்பிக் குதித்தான் பொற் கண்ணன்.

மாபெரும் நிலமகள், மட்டரகமான அவன் கருத்தை மறுத்தாள். சீர்திருத்தம் எனும் பெயரால், சீர்குலைக்கும் விரிவுரைக்குச் செவி கொடாதீர்கள். நீர்மையை நினையுங்கள்! நியதியை எண்ணுங்கள்! வாழ அதுதான் வழி என்று, வாய் திறந்தாள் பூதேவி.

தீயவன் சொற்களால் திசை மாறிய மக்கள், தேவியின் விரிவுரை கேட்டுத் திருந்தினர்.

அதைப் பொற்கண்ணன் அறிந்தான். ஆத்திரங் கொண்டான். அறிவை யிழந்தான். பார்மகளைப் பற்றினன். கட்டிச் சுருட்டிக் கடலில் தள்ளினன். எழுந்து வராதபடி, அத்தேவியின் எதிரில் அமர்ந்தான. பொல பொல என்று கண்ணீர் உகுத்தாள் பூமாது.

அசுரன் செய்த அநியாயத்தை, ஆதி மாதவர் அறிந்தார். வராகர் ஆயினர். கடலுள் புகுந்தார். கொடியோன் முன் வந்து குதித்தார். கண்டு கொக்கரித்த காதகன், தோள் தட்டித் தொடை தட்டித் துள்ளினன். இடியும் மின்னலும்போல், பொரு பொருத்தது போர். இறுதியில், தானவன் தலையைத் திருமால் தளளினர். தீயவன உடலம் தீய்ந்து தொலைந்தது.

ஜீவபுத்தி ஆம்பொழுது, தெய்வபக்தி உள்ளதெனில்,
பாவம் பறக்குமென்று ப்ர்த்துரைத்தார் நல்லோரே

வித்தக நிலமகள், விடுதலை பெற்றாள். உயிர்கள், பழைய வாய்மையைப் பின்பற்றி உயிர்த்தன.

* * * *

பொல்லாத அவன் தமயன், ஏராளமான செல்வம் எய்தியவன். அதனால அவனை, உலகர் இரணியன் என்றனர். இரவில் பகலில் இறவாதான்; விலங்கு பறவைகளால் வீழாதான். அமரர் முனிவர் முன் அழியாதான. உற்று நினைத்தால் உடலாடும்; அவனைக் கூர்ந்து நினைத்தால் குடர் குழம்பும்.

தம்பி இறந்ததை, அத் தானவன் அறிந்தான். மயக்கி என் தம்பியை அழித்த மாயவனை, பழி வாங்குவேன் என்று பதைத்தான். எங்கே அவன் என்று, எல்லா இடங்களிலும் தேடினான். பரவி எங்குமான பரந்தாமன், அநியாய அவன் கண்கட்கு அகப்படவில்லை.

படபடத்தான். படை எடுத்தான். அமரர் திருவை அபகரித்தான். பாதலர் செல்வங்களை பறிமுதல் செய்தான். எந்நாட்டு ஐஸ்வர்யங்களையும், தன்னுடைமையில் குவித்தான். பொருளாதாரம் புரண்டது. அதனால் எல்லா நாடுகளிலும் வறுமை எழுந்தது.

ஒருநாள் ஒரு மாநாடு கூட்டினான். எல்லா உலகரும் வந்து இருந்தனர். இரணியன் எழுநதான. வாய் திறந்தான்.

மண்ணிற்கு மன்னன்; காரிகையர்க்குக் கணவன்; பொன்னிற்குப் பூபதி நான் ஒருவனதான். மேலும் கேளுங்கள்!

ஓடி நாரணன் ஒளிந்தான். என் எதிரில் வாரான. இனி யானே தெய்வம். ஓம் இரண்யாய நமஃ இதுதான் இனிமேல் எட்டெழுத்து. என பெயரான இதை, இனி எணணுங்கள்! ஏத்துங்கள்! மறுப்பார் தலையை அறுப்பன். இது எம் நாட்டு சட்டம். தெரிகிறதா? என்று, இடிக்குரலை எங்கும் எழுப்பினன்.

ஆத்மபுத்தி ஆனால், அருள்ஞான யோகமுறும்;
சாத்விக சாதனைசெய்; என்கின்றார் சான்றோரே ..

ஆடவர் அலறினர். பாவையர் பதைத்தனர். அமரர் முனிவர் அழுது கதறினர். மூவுலகத்தும் பசி முறுவலித்தது. விதியா! தெய்வம் செய்த சதியா என்று, எங்கும் குமுறல் எழுந்தது. வேறு வழியில்லை. ஒரு புறத்தில் மனசாட்சியை ஒதுக்கிவைத்து, எவரும் ஓம் இரண்யாய நமஃ என்றனர். அதன் பயனாக, வயிற்றுக்குச் சோறு வாய்த்தது. இவைகளால் இயற்கை இருண்டது. செயற்கை சிலிர்த்தது. என்ன சங்கடமான வரலாறு இது!

இறைவன் ஒருவன். முத்தொழில் நிகழ, அவன் மூவுருக் கொள்வன். ஒருருவம் பிரம்மா. அடுத்தவர் திருமால். இறுதியில் நின்றவர் உருத்திரர். இரணியனை விளைவித்த இடரைத் தவிர்க்க, குறித்த இடதததில் மூவரும் கூடினர். அவனை அழிக்கும் முறையை ஆயந்தனர்.

இயற்கைக்கு மாறான வடிவம் எடுத்து, அச்யுதர் இரணியனை அழிக்க வேண்டும். கொடியோன குருதி, அப்போது கொப்புளிக்கும். விஷமான ஒவ்வொரு துளியும், ஒவ்வொரு இரணியனாக உருகொள்ளும். அதற்கு இடம் தருவது ஆகாது. குருதிமுழுதையும், திருமால் குடித்துவிட வேண்டும்.

அவர் எங்குமான வியாபகர். அவர் பருக இருக்கும் பாதக குருதி, அதி பயங்கரமானது. திருமேனி முழுதும் பரவி, அது அகில உலகிற்கும் அவதியை விளைவிக்கும். உருத்திரர் சரபமாக உருக்கொளல் வேண்டும். ஏகமான அசுர குருதியை, சரபர் சிரித்தபடியே எரித்திடல் வேண்டும். உலகம் இதனால் உய்தியுறும். இதுவே தகுவது என்று எண்ணினர்.

ஆலோசித்தபடியே இரணியனை அழித்தனர். கோவிந்தர் குடித்த இரணிய குருதியை, சரபரான உருத்திரர், உறிஞ்சி

என்றும் எதுவும் அறியா எளியேனை,
இன்றுநீ காவாயேல், என்கதிதான் யாதேயோ?

ஏரித்து உய்தி செய்தார். அதன்பின், உருத்திரருள் நரசிம்மர்; நரசிங்கருள் உருத்திரர் என, ஒன்றும் மேனியில் ஆயினர்.

மூவரும் தேவரும் முனிவரும் கூடி, இது குறித்து ஆலோசித்த இடம், திருக்கோஷ்டியூர் என்னும் திருப்பெயர் பெற்றது. இத்தலம், இராமநாதபுர மாவட்டம், சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானமாக இருக்கிறது.

புனித அக் கோயிலுள் புகுந்ததும், முதலில் சேவை தருபவர் சரபேசர். மேலும் உள் சென்றால், நடன கோல கண்ணபிரான், இங்கு நானும் இருக்கிறேன் எனகிறார்.

மேலும் அந்த ஆலயத்துள் நின்ற கோல நெடுமாலும், இருந்த கோலத்து எம்மானும், கிடந்தகோலத்து கிளரொளி வண்ணனும், அற்புத சேவை தருகின்றனர்.

சாதாரண மக்கள், ஏகாதசியில் பட்டினி கிடப்பர். இரவில் கண் விழிக்க யாது வழி? பரமபத படம் வைத்து, பாசிகையை-உருட்டிப் பயனை நோக்குவர்.

ஏணி வழியே ஏறுவர். இடை வழியில் உள்ள சிறு பாம்பும் பெரும் பாம்பும் சீறும். இத்துணைக்கும் தப்பினாலும், மலைப்பாம்பு ஒன்று, வாய் திறந்து எவரையும் வரவேற்கும். விரைந்து வந்தாரை விழுங்கிவிடும். இதுவா என் கதி என்று, அவரவர் இதயம் அழுங்கும், புழுங்கும். மீட்டும் முயன்று முன்னேறி, புனித பரமபதத்தில் புகுவது, அவ்வளவு சுலபத்தில் இல்லை என்பது, இதன் அறிவிப்பு.

திருக்கோஷ்டியூரில் இருக்கும் பரமபதநாதன், நெட்டாயிருக்கும் பல படி ஏறி, வந்தார்க்கே சேவை வழங்குகிறான்.

கூட்டு வழிபாடு செய்யும் பக்தர்கட்கு, கோஷ்டிகள் என்னும் பெயரைக் கொடுதத ஊர் இந்த ஊர்.

அமைதி சிதையாமல், அத்தநினை எண்ணி
இமயம்போல் நாயேன் இருக்குநாள் எந்நாளோ

திருமாலின் திருமந்திரமான எட்டெழுத்தை, எவரும் அறியுமாறு பறை ஒலி எழுப்பிய பதி இப்பதி.

ஸ்ரீவைஷ்ணவ திலகமான இராமாநுஜர்க்கு, உடையவர் என்னும் பெயரை உதவிய தலம் இத்தலம்.

கிருஷ்ண ஜயந்தியை, நாடு முழுதும் கொண்டாட, பெரியாழ்வார் வழிசெய்த பேறுதரும் ஊர் இது.

உருத்திர நரசிம்மர் என, உருவாலும் பெயராலும் இருந்தவர் ஒருவரே, எனலை, உலகமறிய உணர்த்திய க்ஷேத்திரம்மிது.

" ஏறும்ஏறி, இலங்கும் ஒண்மழுப் பற்றும் ஈசற்கு இசைந்து உடம்பில் ஓர்

கூறுதான் கொடுத்தான், குலமா மகட்கு இனியான்;

நாறு செண்பக மல்லிகை மலர்புல்கி, இன்னிளவண்டு, நல்நறும்

தேறல் வாய்மடுக்கும் திருக்கோட்டி யூரானே "

என்று, இச் செய்தியைத் தெரிந்து பாடுகிறார் திருமங்கையாழ்வார்.

சர்வ ஐஸ்வர்ய சம்பன்னர் எனும் பொருளில், சிவபிரான் ஈசர் என்னும் பேரினர். அவூர் தரும விடை ஏறுபவர். சத்திய தர்மர் அச்சங்கரர் எனலை, அவர் ஏறதிய மழுவே அறிவிக்கிறதே. அப் பெருமானை, தம் திருமேனியில் தழுவியுளர் நாரணர். இந்த அருமையை அருந்தமிழ் நாடு அறியுமாறு, சரபரை முன்வைத்து, அவரை அங்கத்தில் வைத்த அற்புதராக, சௌம்ய நாராயணர் கோஷ்டியூரில் அதிசய சேவையை அளிக்கிறார்.

ஓடிப் பிடித்தும், ஒடுக்கி மட்டியும், குப்புறக் கவிழ்த்தும், குமுறி யெழுந்தும் இரணியனை மாய்க்கும் கோலமாக உள்ள நரசிங்கச் சுதைச் சிற்பங்களையும், மூல மூர்த்தத்தையும் இங்கு

வினையன் பயன்களொடு, வினை சங்கற்பம்
எனைவொன்றும் சாராமல், எந்தாய் ! அருளுதியே

சேவிக்கும்பொழுது, அத்திருமுகத்தில் உருத்திர ஆவேசமும் உருவாகி யிருப்பதை உணர்வார் உள்ளம் உருகலுறும்,

இந்த அற்புதத்தைச் சேவிக்க, அளவிலா அன்பர்கள் அந்நாளில திரண்டு வந்தனர். அதை அறிந்து மகிழ்ந்த பெரியாழ்வார்,

"நாதனை நரசிங்கனை நவின்று ஏத்துவார்கள் உழக்கிய
பாத தூளி படுதலால் இவ் உலகம் பாக்கியம் செய்ததே!"

என்று உள்ளம் உருகி ஓதுகிறார்.

இந்த அருமையை மறந்த இதயங்கள், இன்றும் சில இடங்களில் இருக்கின்றன. எங்கள் நாரணர் இலலையேல், உங்கள் சிவனார் கதி யாதாகும்? இரணியனை எங்கள் பெருமான் மடக்கி யடக்கவில்லையேல், சிவனும் அவனை வழிபடும் சைவரும் போன இடததில் புலமுளைத்துப் போகாதோ? இரணியனை, அவன் தம்பியை அழிதத எஙகள் நரசிம்மரே பரதெய்வம். மற்ற தெய்வங்கள் வேதனைப்படும். பிறகதும் இறக்கம் தெரிகிறதா? என்று பொஙகி வழிகிறார் ஒரு புனிதர்.

பகை வெறியன இரணியன. அவனைக் கொன்று குடிதத குருதி வெறியர் கோவிந்தர். அவர் வெறியை அடக்கியவர் எங்கள் சிவசரபர் என்று, ஆக்ரோஷததொடு அறிவிக்கிறார் ஒரு அறிஞர்.

இவர் ஒரு புராணம் பாடுகிறார்; அவர் ஒரு புராணத்தை அருள்கிறார். இரு புராணஙகளையும் ஓதிய ஒரு சிலர், சிவ பரத்வ நிர்ணயம், விஷ்ணுபரத்வ நிரூபணம் எனனும் பெயரால் மேடை ஏறி உடுக்கை சிலம்பை அடிக்கலாயினர். இவர்க்கு ஒரு கூட்டம். அவர்க்கொரு கூட்டம். வாய்வாதம் வளர்ந்த போது, மல்யுததமும் பிறந்தது. இருதிறக கைகலபபு நீதி மன்றேறி நின்றது. நீதிபதியோ ஒரு வெளளையர். இவர்கள்

குணதொந்தக் காட்டில், குலவிக் குமையாமல்,
மணமாம் அருள்மோந்து மன்ன அருளுதியே

வாத மோதல் விளங்கவே இல்லை. சாம்பலும் மண்ணும் குறித்த சமயப்போர் இது. இந்த அசம்பாவித கலக இருவர்க்கும் ஐம்பது ஐம்பது ரூபாய்கள் அபராதம் என்றார். அதன்பின் இருதிறமும் அடங்கியது. அடியேன இளமையில் சென்னையில் இபபடி ஒரு சம்பவம் நிகழ்நதது சைவ வைஷ்ணவத்தில் பொதுமக்கள் கொணடிருந்த புனித பகதி வரவர குறைய லாயிற்று. இதற்குக் காரணர், இருவரும். தெய்வம் சீறின் கைதவம் மாளும் எனுமனுபவத்தை, தம்தம் வாழ்நாளில் தாமே கண்டனர். அதனை அடியேனும் அறிந்துளன்.

அன்று விதைத்த சமயப் பகைவிதை, நாட்டை எவ்வளவு பலவீனப்படுத்தி விட்டது என்பதை, எண்ணுந்தோறும் நெஞ்சம் புண்ணும்.

வாழ்க சமரசம். வளர்க ஒற்றுமை. வாய்மை சிறக்க வாழ்வர் நல்லோர்!

வாழ்க சமரச வழிமுறை.

ஓம்.

சிவபோகசாரம்—"அறியும் பகுதி"

(திருமதி தர்மா ராஜாராமன்)

தருமை ஆதீனத்து முதற்குரவராகிய ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய பல நூல்களுள் சிவபோக சாரமும் ஒன்றாகும். பதினோரு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு நூற்று முப்பத்து ஒன்பது வெண்பாக்களால் இயன்ற இந்நூல் சிவநெறி நின்று ஒழுகுவோருக்குச் சிவாநுபவச் செல்வங்களைத் தெளிவாக விளக்குகிறது. இந்த நூலுள் மூன்றாவது பகுதியாக விளங்கும் "அறியும் பகுதி" என்னும் பகுப்பிலிருந்து ஒரு வெண்பாவை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நீரினில் திங்கள் நிழலாடல் போல்,என்றன்
சீரில்லா நெஞ்சம் சிதைவதுன்றன் சம்மதமோ ?

குருநாதனுக்குரிய வணக்கத்தை முதற் பகுப்பில் கூறி இரண்டாவது பகுதியில் இறைவனைப் பெறுதற்குத் தடையான வற்றைக் கூறி அதே இறைவனை அடைதற்குரிய கருவிகளை யும் படிகளையும் உணர்த்துகிறார் குருஞானசம்பந்தர். அதன் பின்பு அறியும் பகுதியை வைத்துள்ளார்.

இந்தப் பகுதி இறைவன் இவன் என அறியச் செய்வது. சிவம் என்பது இன்னது, இன்னது அன்று என்று தெளிவாக நமக்குப் புலப்படுத்துகிறார் சுவாமிகள். இவ்வுலக ஆசா பாசங்களில் கிடந்து உழலும் ஆன்மா, உருவையும், அருவை யும், ஒளியையும், வெளியையும், இருளையும் சிவம் என்று எண்ணுகிறது. ஆனால் இவை யாவும் சிவமல்ல. உலக மருளை நீக்கி, மாயையை நீக்கி, அறிவினால் உணரப்படுவதே சிவம். இதனை ஒரு வெண்பா உணர்த்துகிறது.

" உருவை அருவை ஒளியை வெளியை
இருளைச் சிவமென றிராதே—மருளைப்
பிறிந்தறிவிற் கண்டதனைப் பின்னமற எங்குஞ்
செறிந்தபொருள் தானே சிவம் "

இதனைத் துருவி ஆராய்வோம். உரு என்பது ஈண்டு பிரபஞ்சத்தை உணர்த்துவதாகக் கொள்ளலாம். நாம் நித்தம் காணும் பொருள்களுள் நமது சிற்றறிவிற்கும் சிறிய திருஷ்டிக் கும் பெரிதாகத் தென்படும் பொருள் பிரபஞ்சமாகும். அரு என்பது உரு மாயந்த நிலை. காணும் யாவற்றுள்ளும் மிகப் பெரியவன் எனபதனால் இறைவனை உருவாகவும், கண்ணால் கண்டு இத்தகையவன், இவ்வண்ணத்தன், இவ்வுருவத்தன் என்று அறியவொண்ணாததால் அவனை அருவாகவும் ஆன்மா எண்ணுகிறது.

இனி இவ்வுலகில் ஒளி ஒன்றுமே மற்ற எல்லாப் பொருள் களையும் விளக்குகிறது. இறைவன் மற்ற எல்லாப் பொருள்

விண்ணில் திங்கள் விளங்குவது போல்.என்னைப்
பண்ணி உனதருள் பார்த்துயரச் செய்யாயே

கலையும் விளக்கித் தான் ஒருவன் மட்டுமே விளங்காமல் நிற்ற லால் அவனை ஒளியாக எண்ணுவது உண்டு.

வெளியாகிய ஆகாயத்திலே ஆண்டவன் சர்வவியாபி யாக இருக்கிறன் எனபதனுல் அவனை வெளியாக ஆன்மா எண்ணி மயக்குறுகிறது.

இருளையும் ஆன்மா சிவமாக நினைக்கிறது. இருள் யாண்டும் மண்டிக்கிடக்கிறது. அதனுல் இருளையும் சிவமாகக் கருதுகிறது.

ஆயின் இவை யாவுமே சிவமல்ல. ஏன்? உரு என்பது கண்ணுல் காணதக்கது. நம்முடைய கண்ணே மன்னுப் பொருள் ஆயிற்றே. அத்தகைய மன்னுப் பொருளாகிய கண் ணுல காணபபடும் பொருள் எங்ஙனம் சிவமாக ஆக இயலும்? இனி, காண இயலாத அருவை சிவமென்று சொல்லுதலும் காணுமையினுல் பொருத்தமன்று. ஒளியும் மனித கண்ணுக் குப் புலனுகும் தனமைத்து. அதனுல் அதுவும் சிவமன்று. வெளியும் அருவமாகும்; இருள் பொருளை விளக்கும் தன் மைத்து அன்று. எனவே இவையும் சிவமல்ல.

எனவே சிவனை நாம் இங்ஙனம் அரு உருவப் பொருளால் அறிய இயலாது. அறிவினுல்தான் உணர்தல் வேண்டும்.

"இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கி" நிற்கும் சிவத்தை அறிவினுல் அடைதல வேண்டும். இவ்வுலக மயக் கத்திலிருந்து விடுபட்டு, இப் பிரபஞ்ச மாயைச் சேற்றிலிருந்து அறிவாகிய ஊன்றுகோலின் துணைகொண்டு ஆன்மா சிவத் துடன் ஐக்யமாதல் வேண்டும்.

இக்கருத்தை இவ்வெண்பா உணர்த்திற்று.

உள்ளம் ஒருமையுற உன்னி, உனதடியே
கொள்ளும் எனதுணர்வில் கூட்டுறவு செய்யாயே

கும்மியடிக்கலாம்

[ரஸபதி]

இயற்கை சக்தி என்றும் இருக்கும். அதைப் போற்றி வாழ்பவர் புத்திசாலிகள். விரையம் செய்பவர் வீணர் ஆவர். அந்த சக்தி, உடம்பில், சத்வம் என்னும் பெயரில் சாரும். உயிரில் வாலை எனும் பெயரில் வாழும். உள்ளம் பலவீனம் ஆனல், உடம்பின் சக்தி ஒழிந்து விடும். அறிவு தளர்ந்தால், ஆன்ம சக்தி அகன்றுவிடும். சக்தி, சடாதாரி என்னும் பெயருடைய அந்த அன்னை, உலகம் முழுதும் உறைகினருள். கூடான உடம்புகளில் குடி புகுவாள். உணரும் உயிர்களில் உறவுடையாள்.

நம்மைக் காப்பவர் நாராயணர். தயை மயமான இந்தத் தாய், திருமாலின் தங்கை என்று, தக்கோர் அறிந்துளர்.

"சித்தர் போற்றிய வாலைப் பெண்ணும்; மான ஞானப் பெண்ணும்; அருள் சோதிப் பெண்ணும்; ஆண்டிப் பெண்ணும்; ராஜ பாண்டிப் பெண்ணும்; தில்லை யில் முல்லையில் எல்லையுள் ஆடிய வல்லவளாம்"

என்று, கொஙகணர் கும்மி இத்தேவியின் பிரபாவம் கூறு கின்றது.

அரிக்கு முன்னெழுத்து அகரம். அந்த அகரத்தில் இருந்து ஐந்தெழுத்து உதித்தது. இன்னும் வேண்டுமா? சொல்கிறேன்; கேளுஙகள் என்று மேலும் கூறுகிறது கும்மி நூல்.

ஓதக் கூடாதது ஊமை எழுத்து. சிவாய நம என்பதில், முதல் எழுத்து ஊமை. அந்த எழுத்தை, வாயால் சொல்லக்

சந்ததமுன் தாளினை நம்பிச் சரண் புகுந்த
எந்தம்மைக் கைவிடா(து) ஏற்றருள்நீ.எம்மானே!

கூடாது என்று வரம்புண்டு. வகரத்தோடு சேர்த்து, சிவா என்று சிறக்கக் கூறுவர் சித்தர்கள். முத்தி யட்சரம் ஆன அம் முதலெழுத்தை, உபதேச முகமாக உணர்தல் வேண்டும். வெறும் வாயால் அதை விளம்புநர்க்கு, ஆத்ம சக்தி அழிந்து விடும் ; வாக்கு சித்தி வறண்டு போம்.

ஊமை எழுத்தில் இருந்து உடம்பு உதித்தது ; ஓம் என்பது அதன் உள்ளுயிர். இது சிருஷ்டி ரகசியம் ; உண்மைதானு ! சிந்தித்துப் பாருங்கள்.

இந்த எழுத்தை, " அறிந்து கும்மியடியுங்கடி " தோற்றமும் இறுதியும், இதனில் இருந்தே தோன்றுகின்றன. சும்மா பேசாதீர்கள் ! கேளுங்கள் !

" சாத்திரம் பார்த்தாலும் தானுமென்ன ? வேதம்
தானும் பார்த்திருந் தாலுமென்ன ?
சூத்திரம் பாரத்தலபோல் ஆளவேணும்—அஞ்சு
சொல்லை அறிந்தன்றோ காணவேணும் !

ஐந்தெழுத்து மந்திரத்தை, பஞ்சாட்சரம் என்று அறிவம். அதன் ஒவ்வொரு எழுத்தும், ஒவ்வொரு சொல்லாகும். நமசிவாய நாமததை, சுவாசத்தை உள்ளுக்கு வாங்கும்போதெல் லாம் உணர்வம். இடையருத இம் முயற்சியில், நனவிலும் கனவிலும் நலம்பல பிறக்கும்.

நாங்கள் இதை எப்படி நம்புவது என்கிறீர்களா ?

" காணாததும் காணலாம் அஞ்செழுத்தால் ; அதில்
காரியம் உண்டு தியானம் செய்தால் "

வறட்டுத் தவளைகள், கத்திக் கத்தி வயிறு வெடித்து விடும். அதுபோல், வீண் பேச்சுப் பேசி, விரையம் ஆகலாமா ? உரு ஏற்றுங்கள் ! பாடு பட்டால் பயன் உண்டு ! வெறும் வாய் வாதம் வளர்ப்பது நியாயம் ஆகாது.

கலையாய், கலைமதியாய், காணும் கருத்தில்
நிலையாம் அருளை நினைந்துணரச் செய்யாயே

ஐந்தெழுத்தை, இடையறுது, மேல் சொன்ன முறையில் எண்ணி இருந்தால், அம் உம் ஓம் என இயற்கை எதிரொலிப்பதை அறிவீர்கள் ?

அதன் பின், நாடி நரம்பெல்லாம் நலம் சிறந்த ஐம்பத்தோர் அட்சர நாதம் குதித்து நடமிடும், (சிவசிவ சிவசிவ.)

இந்த அனுபவத்தில் முழுகி யெழுந்த கொங்கணர், கண்டவர் எவரையும், வாலையின் வடிவாகவே காண்கிறார். வாலையாகவே அவர்களை விளித்து, எதையும் கூறுவது அவர் வழக்கம்.

"நெஞ்சம் அழுந்த நினையாமல்—எந்த
நிஜமும் தெரியுமோ வாலைப் பெண்ணே !

நமசிவாய என்று பலகாலம் நவின்று, வரவர சிவாயநம என்று வளர்ந்து, ஊன்றி அதனில் உறவு கொள்ளக் கொள்ள விசித்திர அனுபவங்கள், வாழ்க்கையில் வந்து வந்து விளையாடும். ஏமாந்து விடாதே !

"ஏய்க்குது ஏய்க்குது அஞ்செழுத்து ; அதில்
எட்டிப் பிடித்துக்கொள் இரண்டெழுத்தை ;
நோக்கிக் கொள் வாசியை மேலாக—வாசி
நிலையைப் பாரடி வாலைப் பெண்ணே !"

வாசிக்கத் தக்கது வாசி. வாசியில் உணர்வை வசிக்கச் செய்பவர், நல்ல ராசி யுடையவர் ஆவர். வாசி - இளம் பருவ சக்தி. அவள் அருள் பெறுபவர், என்றும் பேறு பெறுதற்கு உரியவர்.

மனமில்லை. இச் சாதனையில் மதியில்லை என்றால், வாழும் வழியை மாற்றி விடுகிறாள் அந்த வாலாம்பிகை.

அலைவுடைய என்மனத்தில், அத்தாநீ நிற்பாயேல்,
நிலைவுபெறும் உணர்வால், நினைந்தேத்தி வாழ்வேனே

பணமில்லை. தேக பலமில்லை. மனைவி குணமில்லை. மக்கட்கு மதியில்லை என்று வருந்த வழிகாட்டிப் படிப்படியே திருந்தி வாழ வழி செய்வாளாம்,

எடுத்த பிறவி யீடேறும் வரை, காயத்தைப் பத்திரமாய்க் காப்பாற்ற வேண்டும். சாதகர்க்குத் தேகம் சாதகமாக இருக்க வேண்டும். மற்றவரோ பூமிக்குப பாரந்தான்.

" ஊத்தைச் சடலமென் றெண்ணாதே—இதை
உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே
பார்த்த பேருக்கோ ஊத்தை யில்லை—இதைப்
பார்த்துக்கொள் உன்றன் உடலுக்குள்ளே !"

அருமையான ஆக்கை இது. இது நலமுற உளபொழுதே, இடையறுது சிவசிவ எனறு எண்ணியிரு !

நம் முதுகந் தண்டிற்கு மேல் உள்ள உசசியில், உன் நாவிற்கு நேராக, உத்தம ஞான தீபம் ஒளிர்வது தெரியும். அந்த ஒளி வெள்ளம் கண்டபின், உவகை பிறக்கும். ஆஹா ! அந்தத் தெய்வ மேல்வீடும் தெரியும்.

" மேல் வீடு கண்டவன் பாணி ; விண்ணின்
விளக்கில் நினறவள் வாணி ; அந்தத்
தாய் வீடு கண்டவன் ஞானி "

என்று தாளமிட்டுக் கும்மி தட்டுகிருர் கொங்கணர்.

[பாணி - பண்ணென மதி கண்டவன்; அஃதாவது நாத கலம் அறிந்தவன்.]

" உச்சிக்கு நேரே, உள் நாவுக்கு மேல், நிதம்
வைச்ச விளக்கு எரியுதடி ;
அச்சுள்ள விளக்கு வாலையடி—அவி
யாமல் எரியுது வாலைப்பெண்ணே "

மலையாளன நீ,தேவி மலையாளி என்பேன் ;
மலைபோல் எனையிருத்தி மாதேவா காவாயே.

இடது நாசியின் சந்திர கலையும், வலது நாசியின் சூரிய கலையும், நடு நாடியான அக்கினி கலையில் வந்து கலக்கும் போது தான், அந்த வாலையின் ஜோதி ரூபம் தோன்றலுறும்.

நாசி சிறிது. இரு துவாரம் அதனில் இருக்கின்றன. இன்ப சுவாசம், அவைகளின் வழியே இயங்கும். கம்பீரமாக நிமிர்ந்து அவைகளைக் கட்டுப் படுத்தினால், குண்டலினி வழி விலகிக் கூத்தாடும். அதனால் மதி மண்டலம் வாய்திறக்கும். அமுத தாரைகளை நீ அதன் பின் அனுபவிக்கலாம்.

"கையிலாக் கட்டையன் கட்டிக்கிட்டான்—இரு
காலில்லா நெட்டையன முட்டிக்கிட்டான ;
ஈயில்லாத் தே னெடுத்து உண்டுவிட்டான் ;
இனிக்குது இல்லையே வாலைபபெண்ணே !"

[குட்டையன - நாசி. கட்டிக்கிடல் - (சுவாசத்தைப் பந்தித்தல். கால் இல்லா நெட்டையன் - கால்களே இல்லாத (குண்டலினிப்) பாம்பு. ஈ இல்லா - (இதுவரை எவர்க்கும்) உபயோகப்படாது இருந்த. தேன் - (மதிமண்டல) அமுதம்.' இனிக்குது இல்லை - இது பிறர்க்கு இதுவரை தெரிந்தது இல்லை.]

அநாதி நித்யமானது ஒரு சோலை. வகரக் குயில் அதில் வாழ்கிறது. பண்புளர் அநுபூதிமான்கள் ; அவர்கள் பழுத்த அனுபவப் பான்மையர். அடுத்தவர் சாதகர். அவர்கள் புது மாப்பிள்ளைகள் போன்றவர்கள். அவர்கட்கு விருந்து வைக்க, வாலைக் குயில், அவர்களை நோக்கி வா ! வா என்று கூவிக் குரல் கொடுத்தபடியே இருக்கிறது.

தோப்பிலே மாங்குயில் கூப்பிடுதே—புது
மாப்பிள்ளை மார்வந்து சாப்பிடவும் ;
ஏய்க்குது இப்படி ஐந்தாறு ஆந்தை
இருந்து விழிக்குது பாருங்கடி !

ஆடும் உனதருளால், எனவினையை ஆட்டி,
வீடுபெறக் காட்டி விகிர்தாநீ ஆளாயே

பல தத்துவங்களைக் கடந்தாயிற்று. எஞ்சிய சில தத்துவங்கள், அடடா இவளைக் கைவிடுவும்போல் இருக்கிறதே என்று ஏமாந்து விழிக்கின்றன எனபது, இங்குள குறிப்பு.

இந்த சாதனைக்கு இல்லறம் மிகமிக ஏற்றது. துணைவியரையும் இங்கிலையில் பயிற்றினால், தொடரும் அவர்களால் தொல்லை யிராது. வனிதையர் அவரும் வாழ்வு பெறுவர். தனித்து சாதனை செய்தால், என்னமோ ஏதோ என்று அஞ்சும் அவர்களால், வரும் இடையூறிற்கு வரையறை யிரா. கேளுங்கள் !

'' மண்ணும் இல்லாமலே வானும் இல்லை
வாசம் இல்லாமலே பூவும் இல்லை
பெண்ணும் இல்லாமலே ஆணும் இல்லை
பேணிப் பாரடி வாலைப் பெண்ணே !!'

என்று அவர் கூறும் அருமை கோடி பெறும்

'' இந்த விதத்திலே தேகத்தி லே,தெய்வம்
இருக்கையில், புத்தி கரிக்கையினால்,
சந்தோட வாலையைப் பாராமல்—மனிதர்
சாகிற(து) ஏதடி வாலைப் பெண்ணே !''

[புத்தி கரிக்கை - அறிவு இருவடைதல்.]

சிருட்டி ரகசியமே ஒரு தனி. சதிபதிகளின் அபேத உணர்வில் சந்ததி உதிக்கும். அதுபோல், உணர்வும் உயிர்ப்பும் ஒன்றுனால், வாலை நம்முன வருவது நிச்சயம். பயப்படாதீர்கள். அவள் நமைப் பயந்த தாய். தெரிகிறதா !

ஆயுள் உள்ளவரை காயம் இருக்கும். இருக்கும் வரை இயல்பிற்கு முயலாமல், '' காயமே இது பொய்யடா ! வெறும் காற்றடைத்த பையடா ! மாயனார் குயவன் செய்த மண்ணு

மானசப் பொய்கையினில், மனனிஅடி யேன்முழுக,
வானதிபோல் வாஜயா ! வாழ்வன் அடியேனே.

பாண்டம் ஓடடா !" என்று அநுபூதிமான்கள் பாடலை, தாளம் மேளம் தவருமல் பாடிக் கொண்டிருப்பது அல்ல பண்பு. சொல்கிறேன் கேள் !

" வீணுசை கொண்டு திரியாதே—இது
மெய்யல்ல பொய்வாழ்வு ; பொய்க்கூடு ;
காணுத வாலையைக் கண்டு கொண்டால்—காட்சி
காணலாம் ; ஆகாயம் ஆளலாமே !

உலகில் உழைப்போடு இரு ! உறுபொருள் தேடு ! அள வாக வாழ்க்கையை அமைத்துக் கொள் ! ஊதாரிச் செலவு செய்யாதே !

பாக்கியமும், மகள் போக்கியமும், ராஜ
யோக்கியமும் வந்தது ஆனுக்கால்,
சீக்கிரம் தருமம் செய்ய வேண்டும் ;
" நாளை என்று சொல்லல் ஆகாதே—மெய்ம்மை
நான்மறை ஓங்கி முழங்குதடி !;"
உறுதியான இவ் உபதேசத்தைக் கேள் !
" வழக்கழிவுகள் சொல்லாதே—கற்பு
மங்கையர் மேல்மனம் வையாதே !
பழக்க வாசியைப் பார்த்துக் கொண்டு—வாலை
பாதத்தைப் போற்றடி ஞானப் பெண்ணே !"

வாலை எவ்வளவு கருணையள் தெரியுமா ! கவனமாகக் கேள் !

" ஆயுசு கொடுப்பாள் ; நீரிழிவுமுதல்
அண்டாது மற்ற வியாதி எல்லாம் ;
பேயும் பறந்திடும் பில்லி விஞடியில்
பத்தினி வாலைப்பெண் பேரைச் சொன்ஞல் "

படைப்பாய், படியளிப்பாய், பாழ்செய் வினையைத்
துடைப்பாய்நீ என்துரையே என்று துதிக்கின்றேனே,

" நித்திரை தன்னிலும் வீற்றிருப்பாள்—எந்த
நேரத்திலும் வாலை முன்னிருப்பாள்
சத்துரு வந்தாலும் தள்ளி வைப்பாள்—வாலை
உற்ற காலனையும் தான் உதைப்பாள் "

" எல்லாம் தானாய்ப் படைத்தவளாம்; வாலை
எள்ளுக்குள் எண்ணெய்போல் நின்றவளாம் "

இப்படி எல்லாம் கருணையொடு பாடும் இக்கும்மியினை ஊன்றி உணர்ந்து, ஒருமை மனம் கொண்டால், வாலை அருள் வாய்க்க நம் இதயம் இன்பக் கும்மியடிக்குமே!

வாழ்க சித்தர்கள் வளம்.

ஓம்.

தீராத விளையாட்டுப் பிள்ளை.

[ஆ. கி. ரங்கராஜன்]

கண்ணனுடைய வரலாறுகளை எத்தனை தரம் பேசினாலும், படித்தாலும், கேட்டாலும் உள்ளம் தெவிட்டுவதே யில்லை. அதற்குமாறாக, இன்பமே அபரிமிதமாகப் பொங்கிஎழுகின்றது. காரணம், கண்ணன் அருட் கடவுள். அது மட்டுமல்ல. மனிதரிடையே தானும் ஒரு மனிதனாகத் தோன்றி திடீர் திடீரெனத் தான் இறைவனே என்பதைப் பிறர் உணருமாறு செய்வதும், கண்ணன உண்மையிலே மனிதன் தானா இறைவனா எனப் பலர் அதிசயித்து ஐயுற்றுத் திகைக்குமாறு செய்வதும், எவருக்கும் நகைப்பூட்டும் வேடிக்கைகளைச் செய்வதும் தனது லீலைகளாக கொண்டிருந்தான்.

முக்கண் அருள்நோக்கை, முன்னியுணர் என்றன்முன்,
செர்க்கே! திருவே! சுகமளிக்க வாராயே.

கண்ணனின் லீலைகளில் முழு கவனத்தையும் செலுத்திய கோபியர்கள் அவன் மீது அளவிலா அன்பு கொண்டு, குழந்தையைப் போலவும் தம்மை உய்விக்க வந்த தெய்வமாகவும் கருதி, சற்று நேரமும் அவனைப் பிரிந்திருக்க சகியாமல், இரவு பகலும் அவனைக கண்ணா! கண்ணா! என்று அழைத்து, அவனுடனிருந்து மகிழும் வண்ண மிருந்தனர். ஆயர்களும் அவனைத் தங்கள் தெய்வமாகக் கருதி சந்ததமும் வழிபட்டனர். கண்ணனும் அதற்கிணங்கி ஏக காலத்தில் எண்ணற்ற வடிவங்கள் கொண்டு, ஒவ்வொருவர் வீட்டிலும் ஒருவனாகத் தங்கி, அனைவரையும் மகிழ வைத்தான்.

கண்ணனின் வளர்ப்புத் தந்தை நந்தகோபர்; அவர் தம் மனையாள் யசோதா தேவி. இருவரும் கண்ணனை மிகவும் செல்வமாக வளர்த்தனர். யசோதை கூட கண்ணன் செய்து வந்த சிற்சில குறும்புகளைக் கண்டித்ததுண்டு. ஆனால் நந்தகோபரோ, சற்றும் கண்ணனை எக்காரணம் கொண்டும் கண்டித்ததில்லை. யசோதையும், தப்பித் தவறிப் பிறர் கண்ணன் மீது புறம் பேசுதலை ஏற்காமலே, அவர்களையே கண்டிப்பாள். ஒரு சமயம் யசோதையே திகைக்கும் வண்ணம் தன்வாயைத் திறந்து, சகல அண்ட பிண்ட சாராசரங்களையும் காண்பித்து மறைத்தான.

இவ்வாறாக இருக்கையில் ஒரு சந்தர்ப்பத்தில் மார்கழி மாதம் முடிந்து தை மாதம் பிறந்தது. அப்போது ஆயர்கள் வழக்கம் போல நந்தகோபரின் உத்தரவுப்படி இந்திர விழாக் கொண்டாடத் தொடங்கினர். எங்கும் தோரணங்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரித்து, மெழுகிக் கோலமிட்டுத், தூய்மையாக நீராடி, நல்ல உடைகளணிந்து, பய பக்தியுடன் இந்திரனுக்குப் பொங்கலிடத் தொடங்கினர். அதைக் கண்ட

அன்னை வலப்பால் அமர்வதுநீ மெய்யாமேல்,
என்னை எடுத்துன் அடியிலிடு எந்தாயே!

கண்ணன் ஏது மறியாதவன் போல, நந்தகோபரை அணுகி, ஏன் இவர்கள் இப்பண்டிகையைக் கொண்டாடு கிறார்களென வினவ, அவர், இந்திரன் மேகங்களை வாகனமாக உடையவ னென்றும், மேகங்கள் மழை பொழிந்தால்தான் உலகின ருக்கு சுகமுண்டாகு மென்றும், பசு முதலிய கால் நடைகள் மேய்வதற்கும், மற்ற அவற்றின் பிற தீனிக்கும் புல் பருத்தி போன்ற தானியங்கள் அதனுல் நன்கு விளைந்து, அவைகள் நிறையப் பாலை நமக்கு அளிக்கு மென்றும், எனவே இந்தி ரனை மகிழ்வித்தால், அவன மேகங்களை ஏவி மழை பொழியச் செய்வா னென்றும், அதற்காகவே இப்பண்டிகை கொண்டா டப் படுவதாகவும் கண்ணனிடம் விளககினுர்.

கண்ணன் அது கேட்டு நகைத்து, இந்திரன் மழைக்கு அதிபனல்ல என்றும், சூரியனே மழைக்குக் காரணம் என்றும் எனவே இப்பண்டிகை முக்கியமல்ல என்றும் கூற, நநத கோபர், அதற்குக் கணணன சொல்வது எப்படி யிருப்பினும் வழக்கத்தை நிறுத்தவோ, மாற்றவோ கூடாதென்று கூறிவிட் டார். கணணன இசசமயத்தில் ஒரு லீலை புரியக் கருதினன். ஆயர்கள் வரிசை வரிசையாக அடுபபுகளை மூட்டி எரியவிட்டு. புதுப்பானைகளில பொங்கல் செய்து கொண்டிருந்தார்கள். கண்ணன அதைக கண்டான். அவன் தீராத விளையாட்டுப் பிள்ளை யல்லவா ?

பொதுவாக மாந்தர்களாகிய நாம் பிறக்கும் பொழுது, நமக்கு எத்தகைய ஆற்றலும் இருப்பதில்லை. குவா குவா என்று அழுவதைத் தவிர வேறெதுவும் நம்மால் செய்து கொள்ள முடியாது. நம் மனதில் தோனறுவதைப் பிறருக்கு எடுத்துரைகக முடியாது. உடம்பில் ஏதேனும் கோளாறு இருந்தால் நாம் அழுகிறோம். அவ்வேளையில் அதை அறியாத

உய்யவழி தாளன் (று.) உலறியமு கின்றேற்கு
செய்யாய் அருளென்னில், ஜிவிக்க மாட்டேனே!

நமது தாய், குழந்தை பசியால் அழுகிறது என்று பால் ஊட்டு வாள். சிலசமயங்களில் நமக்கு மனக் குறையோ, உடல்நலக் குறைவோ இருந்து அதிகப்படியாக அழுதால், நமது தாய் கொடியவளாக இருந்துவிடும் பட்சத்தில், நம் கதி அதோகதி தான்! கரத்திற்கு சதை பிடிபடும் இடங்களை யெல்லாம் கிள்ளி, அடித்து நாம் துள்ளித்துடித்துப் பதைத்துத் தவிக்க வைத்துத் தன் பழியைத் தீர்த்துக்கொள்வாள். கொடுமை செய்யும் பெற்றோர்களுக்குக் குழந்தையாகப் பிறந்து விட்டால் அப்பப்ப! அதனைக் கற்பனை செய்வதற்கே உள்ளம் தவிக்கிறது!

ஆனால் கண்ணனோ அவ்வாறல்ல. பிறக்கும் போதே பெற்றோருக்கு அளவுகடந்த மகிழ்ச்சி யூட்டிப் புன்னகை புரிந்தவன். உத்தமர்களுக்கே குழந்தையாகப் பிறந்த புருஷோத்தமன் கண்ணன்! அவன் இறைவனே ஆதலின், அவனுடைய விளையாட்டுகளுக்கொரு முடிவுண்டோ? எனவே தான், பாரதியாரும் கண்ணனைத் 'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்று குறிப்பிட்டார்.

வாசனை குமுகுமு என எழுந்த பொங்கலைக் கண்ணன் சட்டென்று தன் கைவிரல்களால் அள்ளித் தனது நாவினால் நக்கி எச்சிற் படுத்தினன். இந்த வாடையானது இந்திரனிடம் வீசியது. இது கோகுலத்திலிருந்து வந்ததென அறிந்தான் இந்திரன். கோகுல வாசிகள் தன்னை அவமதித்ததாக நினைத்துக் கொடிய மழையைப் பெய்வித்து ஆயர்பாடியை அழித்து வரக் கட்டளை யிட்டான்.

இடி, மின்னல்களுடன் நாற்றிசைகளையும் இருளாக்கிக் கிப் பயங்கர மழை பொழியத் தொடங்கியது. பலர் கண்ணனை நிந்தித்தனர். பலர் கதறினர். பலர் தவித்தனர். இறுதி

எடுத்தாடும் நின்னடியை, என்தலைமேல் வைநீ;
தடுக்கும் விதிஎன்னில, நீ தடுக்கல் ஆகாதோ

யில், இதற்கொரு மாற்றுத்தேட, கண்ணனையே அழைத்து அலறினர். அவர்களைக் கண்டு கண்ணன் நகைத்து எதற்கும் அஞ்சவேண்டாமெனக் கூறி, உடனே அடுத்தாற் போலிருந்த கோவர்த்தனம் என்ற ஒரு குன்றைத் தன்கையால் எடுத்து இடது கையின சுண்டு விரலில் பிடித்துத் தாஙகி நின்ருன். "இபபோது உஙகள் துயரததை நான தீர்த்ததால், எனக்கே பொங்க லிடுங்கள்!" எனருன்.

ஒரு சொட்டுத் தண்ணீரும் தஙகளை நனைக்காமல் கண்ணன் செய்து விட்ட காரியத்தை வியந்து பெருமகிழ்வுடன் கண்ணனுக்கே பொஙகலிட்டு ஆடிப் பாடினர். இது போல் ஒரு வாரம் கழிந்தது.

நாரத முனிவர் மூலம் கண்ணனின் லீலையையும் மகிமையையும் அறிநத இநதிரன திடுக்கிட்டுத் தன் தவறுக்கு வருந்தி மழையை நிறுததச் செய்து, புவிக்கு வந்து கண்ணனை சரணடைந்து, மனனிப்பு வேண்டி, நந்தகோபரையும், யசோதையையும் கண்ணனையும் சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்று, அஙகு விதிபபடி கண்ணனைப் பூஜித்தனன. கோக்களையும் (பசுக்களையும்) இடையர்களையும் காத்தவனுதலால் கண்ணனுககு கோவிந்த ராஜனென நாமம் சூட்டிக் கௌரவிததனன. கண்ணனும், இந்திரனிடம் சூரியனின் பெருமைகளை விளக்கி, தை மாத ஆரம்பத்தில் சூரியனுககுததான் பொஙகளிட வேண்டு மென்பதையும், அதற்கு முநதிய நாள் போகி பணடிகை என்ற பெயரில் மக்கள் இந்திரனுக்கு விழா கொண்டாடுவரென றும் அருளினன.

இந்திரனும் அதை ஏற்று, தைமாதப் பிறப்பின் மறுநாள் கண்ணனுக்குப பொங்கலிட்டு வழிபடுவதாக வாக்களித்தான். மூன்று நாட்களுக்குப் பின, நந்தகோபரையும், கணணனையும்

நற்பயன் யாதொனறும் வேண்டா; நதிமதியாய்!
சித்பயன் போதும்! சிவமே அருளாயோ!

யசோதையையும் பூவுலகில் ஆயர்ப்பாடியில கொண்டு சேர்த்தான். அப்போது கண்ணனின பெற்றோருக்கும், மற்ற ஆயர்களுக்கும் ஏற்பட்ட மகிழ்சசியையும் வியபபையும் விளக்குவதற்கு நம்மால முடியுமா ?

தேவியின் அடியார்களும் விநாயக பக்தர்களும் கூட கண்ணனின இச் செயலை வியந்து, பினவருமாறு, தேவியைக் கண்ணனின் தஙகையாகவும், விநாயகனைக் கண்ணனின மருமகனென றும் குறிபபிடடுப புகழுகின்றனர்.

மேகம் பெயுமழை வேதனை செய்திட
ஆகம் பதறிடு ஆயாகள் மகிழ்ந்திட
வேகம் கொடு,கோ வர்த்தனக் குனறினைப்
பாகம்தர, நிறுத்திடு பவன தஙகாய் !
—ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மாலை—58-ம் பாடல்.

புரிவாய் உனதருள் புவனத் தவர்க்கே ;
திரிவாய் அண்டத் திரிலோகமெலாம் ;
கிரிவாய் கைகொடு பெயர்தெடு கண்ணன்
பரிவாய், 'மருக !' என றழைக்கும், சுந்தரனே !
ஸ்ரீ விநாயகர் அந்தாதி—60-ம் பாடல்.

31st DECEMBER 1964

This the final day of the year 1964, as has been the case of several such days in the past for several years, has been a day of momentous significance with the devotees of Lord Muruka of Tiruttani. Presumably this religious centre is situate on one of the hills belonging to the Tirupathi Hills range. There is a remarkable coincidence between the

Mount Everest of the Himalayas and the mount of Tiruttani of the southern hill range. The Everest of the Himalayas reminds one of the realised great souls who have freed themselves from consternations, tribulations and the conflicts of desire, passion and unrest.

Even so, the spiritual peak of human realisation in the south stands for the summit of the realisation of God-head. Suffice it to say that Sri Muthuswami Dikshitar, the renowned poet and musician of the south, and saint Arnagiri of Thiruppugazh fame, not to speak of the rest, attained the Lord's blessings, inspiration and message at this holy hill. The scintilating poesy, devotion and the soulful outburst of God-love emanated from the above mentioned sages on this devoted hill. In fact, their contributions in music, sanskrit and philosophy are remarkably clear expositions for the short-cut to man to reach the supreme.

The Brahmmic stage of universalism and God-love enunciated in aphorisms of the two saints in the Suprabhada at Tiruttani and the answering devotion in the strains of Sri Swati Tirunal and the sage Muthuswami Dikshitar mark out the Tiruttani as the *Ever-rest* Everest of South India, if not of the world.

Tiruttani may be easily said to mark the meeting place of man and god. The Tiruppugazh songs of Saint Arunagiri are simple, easily understood expositions of Vedic truths enshrined in the Purusha Sukta.

The Advaidic everlasting peace and rest of mankind, the ever-rest of mankind of the north, has been demonstrated in the peaceful absorption of Thanigai—the saintly abode of the Indian South. Hence, Saint Arunagiri sang, "Thou art of everywhere, the *bedha* and the *abedha* of the seeming world, the one entity that fills the Universe with undifferentiated, all filling *Prema*. Oh! Lord Muruga! Thou art That!" May the Blissful name resound all over the world, and may mankind learn to walk on the prosperous lines of amity, peace, service and blessedness. There are no gods but one. There is but one humanity that thrives, and there is but one soul of love that knits the universality of being and becoming. All are to be saved. There is none to be lost, as Thou art there and everywhere.

—*Thiruppugal Mani.*

210

அமிர்தவசனி பிரசுரங்கள்

54, பந்தர் தெரு, சென்னை-1.

குகஸ்ரீ ரசபதி அவர்களின் விரிவுரையுடன்

அரிய அருள் நூல்கள்		ரூ.	பை.
கந்தரநுபூதி	(விரிவுரை)...	1	25
திருவகுப்பு (6 மட்டும்)	,, ...	1	50
திருசசெந்தூர் பிள்ளைததமிழ்	,, ...	2	00
கந்தர் கலிவெண்பா	,, ...	2	00
திருக்கயிலாய ஞானவுலா	,, ...	2	00
விநாயகர் அகவல் (ஔவையார்)	,, ...	1	50
கோளறு பதிகம்	,, ...	0	40
சண்முக கவசம் (பாம்பனடிகள்)	,, ...	0	60
திருப்புகழ்மாலை (360 பாடல மட்டும்).	...	1	25
கநதக்கதம்பம் (பாடலமட்டும்) 288 பக்கம்.	...	1	25

தபோவனப் பதிப்பக நூல்களும் அனுப்ப இயலும்.

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம முன்னதாக அனுப்பவும். வி.பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சநதா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சிததிரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சநதாச செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை-1.

" ஏற(து) ஏறும் இடைமரு(து) ஈசனார்
கூறு வார்வினை தீர்க்கும் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்க்(கு)
ஊறி ஊறி உருகும் என் உள்ளமே "

—(அப்பர்.)

No. 1506
ASOKA

Regd No. M. 5390 தை ௴ (1964 அமிர்தவசனி 16-10.

Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.
MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பினாயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3.
டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள் :
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால்,
தயை கூர்ந்து வருகிற விசுவாவசு வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்
படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tiruppalli Street, Madras-1
Edited & Published by S. Natarajaswami 6 ... Street Madras-1